# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 126 சுபகிருது வருடம், கார்த்திகை மாதம் 29ஆம் திகதி வியாழக்கிழமை (15.12.2022) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் அவ்வல் - 20, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60


## கமெண்ட் கந்தர்...







அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட அமெரிக்க குடியுரிமையை துறக்குமாறு பெசில் ராஜபக்ஷவிடம் அவரது குடும்ப உறவுகள் வலியுறுத்துவதாக தகவல்.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைத்து ரணிலை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தலாம் என்கிறாராம் பெசில்.

அதற்கான வியூகங்கள் வகுக்கப்படுகின்றனவாம்.

# தமிழர் கோரிக்கைகள் சாதகமாகப் பரிசீலிப்பு!



## விரைந்து நடவடிக்கைகளை எடுக்கவும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவு

**நமது நிருபர்**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களின் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து முன்வைத்த மூன்று கோரிக்கைகள் தொடர்பில் ஓரளவு சாதகமான நிலைப்பாடுகள் பிரதிபலிக்கப்பட்டன.

அந்த மூன்று கோரிக்கைகளையும் ஒட்டி அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு,

ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் விடுவிப்பு, காணி அபகரிப்பு நிறுத்தம், அரசியல் கைதிகள் விடுதலை, காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் ஆகிய விடயங்களை நிறைவேற்றதிகாரமே - ஜனாதிபதியே - நேரில் கையாண்டு, அடுத்த ஜனவரி மாதத்துக்குள் தீர்வுகளை முன்வைக்க வேண்டும்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் ஜனாதிபதி தரப்பே நேரடியாக தொடர்பாடல்களை மேற்கொள்ளவேண்டும்.

02 பக்கம்

## வழமைக்கு திரும்புகிறது வளிமண்டலம்

**கே.சுபானி**

இலங்கை வளிமண்டலப் பகுதியில் ஏற்பட்டிருந்த வளிமாசு படிப்படியாக குறைந்து இயல்புநிலைக்குத் திரும்பி வருவதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் திணைக்களப் பணிப்பாளர் சரத் பிரேமசிறி 'தமிழன்' நாளிதழுக்கு நேற்று தெரிவித்தார்.

02 பக்கம்

## ரூ.35 கோடி பெறுமதியான ஹெரோயின் மீட்பு

### இருவர் கைது -'ஜிலே' தப்பியோட்டம்

அங்கொட லொக்காவின் சகாவான 'ஜிலே' என்பவருக்கு சொந்தமான 35 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான 12 கிலோ ஹெரோயின் நேற்று (14) முல்லேரியா பரோன் திலகரத்ன மாவத்தையில் வைத்து பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த ஹெரோயின் போதைப்பொருளுடன் இரண்டு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேலும் தெரிவித்துள்ளனர். 02 பக்கம்

## ஐ.எம்.எவ். நிதி உதவி தாமதமாகும் சாத்தியம்

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கவுள்ள கடன் உதவி தொடர்பில் இவ்வருட இறுதிக்குள் உடன்பாடு எட்டப்படுமா என்பது சாத்தியமற்றதென ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் பரிமாறிக்கொண்ட தகவல்களை மேற்கோள்காட்டி இந்த செய்தி வெளியிடப்பட்டுள்ளது. 02 பக்கம்

## தரம் 05 மாணவர்களுக்கு கருத்தரங்கு நடத்தத் தடை

நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகளில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பிரத்தியேக வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்துவதற்கு நேற்று நள்ளிரவு முதல் தடை விதிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பரீட்சை நிறைவடையும் வரை இந்தத் தடை அமுலில்...

02 பக்கம்

## காணாமலாக்கப்பட்டவர்கள் அனைவரையும் கொன்றுவிட்டீர்கள் என்பது எமக்குத் தெரியும்!

### ரணிலுடனான கூட்டத்தின்போது நேரில் கூறினார் சம்பந்தன்

**நமது நிருபர்**

"காணாமலாக்கப்பட்டவர்கள் அனைவரையும் நீங்கள் கொன்றுவிட்டீர்கள் என்பது எமக்குத் தெரியும். ஆனால், என்ன நடந்ததென்ற உண்மை கண்டறியப்பட்டு பொறுப்புக்கூறல் நிச்சயமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை சர்வகட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுத்துரைத்தேன்" - இவ்வாறு கருத்துத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

இந்தக் கூட்டம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த கருத்து வருமாறு:-

02 பக்கம்



## இலங்கையின் மூலோபாயத்துக்கு உலக உணவுத்திட்டம் அங்கீகாரம்

இலங்கையின் மூலோபாயத் திட்டத்திற்கு, உலக உணவுத் திட்டத்தின் நிறைவேற்றுச் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இம்மூலோபாய திட்டம் 2023 முதல் 2027 வரைக்குட்பட்ட காலப்பகுதியை அடிப்படையாகக் கொண்டதுடன், அதற்கான பெறுமதி 74.87 மில்லியன் அமெரிக்க டொலர் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று... 02 பக்கம்

## 05 அத்தியாவசிய பொருட்களின் விலையை குறைத்தது சதொச



ஐந்து அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைத்துள்ளதாக லங்கா சதொச நிறுவனம் நேற்று அறிவித்தது.

அதனடிப்படையில்... 02 பக்கம்



## அரிசி இறக்குமதி தடை

பாஸ்மதி தவிர்ந்த ஏனைய அரிசி வகைகளை இறக்குமதி செய்வதற்கு தடை விதித்து நிதி அமைச்சு வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

கப்பல்கள் மூலம் இலங்கைக்கு தற்போது கொண்டுவரப்படும் அரிசி, டிசம்பர் 09ஆம் திகதிக்கு முன்னர் கடன் கடிதங்கள் வெளியிடப்பட்ட ஓடர்களை விசேட அனுமதிப்பத்திரத்தின் ஊடாக துறைமுகத்தில் இருந்து விடுவிக்க முடியுமென அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இனப்பிரச்சினைக்கு 52 நாட்களில் தீர்வா?

### முட்டாள்தனம் என்கிறார் கம்மன்பில



**கே.சுபானி**

நாட்டில் கடந்த 64 வருடங்களாக தீர்வு காணப்படாத இனப்பிரச்சினைக்கு 52 நாட்களுக்குள் தீர்வு காண நினைப்பது என்பது முட்டாள்தனம் என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில நேற்று தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை பிளவுபடுத்தும் வகையிலான தமிழ்ப் பிரிவினைவாதிகளின்... 02 பக்கம்

## கடற்றொழிலாளர்கள் பூநகரியில் போராட்டம்

### கடலட்டை பண்ணையை விரைவுபடுத்துமாறு வலியுறுத்து



02 பக்கம்




## சீமெந்து விலை குறைப்பு

சீமெந்து மூடை ஒன்றின் விலை 225 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது.

நேற்று நள்ளிரவு 12 மணிமுதல் அமுலுக்கு வரும் வகையில் சீமெந்தின் விலை குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இன்சி கோர்ப்பரேஷன், இன்சி போர்ட்லண்ட் 50 கிலோ நிறையுடைய சீமெந்து மூடையொன்றின் புதிய விலை 2,750 ரூபாவாகும்.

முன்னதாக ஒரு மூடை சீமெந்தின் விலை 2,975 ரூபாவாக காணப்பட்டது.

## சப்புகஸ்கந்த நாளை முதல் இயங்கும்

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் நாளை (16) மீண்டும் திறக்கப்படும் எனவும் அதன் பின்னர் எரிபொருள் உற்பத்தி ஆரம்பிக்கப்படும் எனவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்




# கொங்கோவில் கடும் வெள்ளம், மண்சரிவில் சிக்கி 120 பேர் பலி!



கொங்கோவில் கடும் மழையால் ஏற்பட்ட பெரும் வெள்ளம் மற்றும் மண்சரிவில் சிக்கி 120 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொங்கோவில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்தது. இதனால், முக்கிய நகரங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன. தலைநகர் கின்ஷாசாவின் பெரும்பாலான பகுதிகளை வெள்ளம் சூழந்துள்ளது. நூற்றுக்கணக்கான வீடுகளை வெள்ளம் அடித்துச் சென்றுவிட்டதால் தலைநகரில் மட்டும் சுமார் 20 ஆயிரம் பேர் வீடுகளை இழந்து தவித்து வருகின்றனர். வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டும், மண்சரிவில் சிக்கியும் 120 பேர் உயிரிழந்துள்ளனர்.

வீடுகள் மற்றும் வீதிகளின் மேல் வெள்ளநீர் சூழ்ந்துள்ளதால் கூரைகளில் தஞ்சமடைந்துள்ளோரை மீட்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. மழை, வெள்ளம் காரணமாக முக்கிய நெடுஞ்சாலைகள் துண்டிக்கப்பட்டுள்ளதால் படகுகள் மூலம் மீட்பு மற்றும் நிவாரணப் பணி நடைபெற்று வருகிறது.

கொங்கோ ஆற்றங்கரைகளிலுள்ள 70 மீனவ கிராமங்கள் தனித்தீவுகளாகி விட்டதால் ஹெலிகொப்டர் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டு வருவதாக கொங்கோ அரசு தெரிவித்துள்ளது.

# எல்.பி.எல். 2022 - நடப்பு சம்பியனை வீழ்த்தி முதலிடத்தில் கண்டி பல்கன்ஸ்

நடப்பு எல்.பி.எல். தொடரில் வனிந்து ஹசரங்க தலைமையிலான கண்டி பல்கன்ஸ் அணி 10 ஓட்டங்களினால் திஸர பெரேரா தலைமையிலான நடப்பு சம்பியன் ஜப்னா கிங்ஸ் அணியை வீழ்த்தி புள்ளிப்பட்டியலில் முதலிடத்திற்கு முன்னேறியது.

கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்ற தொடரின் 13ஆவது ஆட்டத்தில் ஜப்னா கிங்ஸ் - கண்டி பல்கன்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கண்டி பல்கன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்களை மாத்திரம் இழந்து 160 ஓட்டங்களை குவித்தது.

துடுப்பாட்டத்தில் பேபியன் அலன் 47 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டங்களாக குவித்தார்.

161 என்ற இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜப்னா கிங்ஸ் அணி ஆரம்பத்திலிருந்து விக்கெட்களை இழக்க 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்களை இழந்து 150 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 10 ஓட்டங்களினால் தோல்வியடைந்தது. போட்டியின் ஆட்டநாயகனாக பேபியன் அலன் தெரிவானார்.

## சப்புகஸ்கந்த...

மசகு எண்ணெய் தட்டுப்பாடு காரணமாக சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் நான்காவது முறையாக ஒக்டோபர் 7ஆம் திகதி மூடப்பட்டதுடன், இரண்டு மாதங்களுக்குப் பிறகு மீண்டும் திறக்கப்படவுள்ளது.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் தாங்கிகளில் 90 ஆயிரம் மெற்றிக் தொன் மார்பன் எண்ணெயை இறக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும் மேலும் 90,000 மெற்றிக் தொன் எண்ணெய் இறக்குமதிக்கான கொள்வனவு நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதாகவும் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

உற்பத்தி செயல்முறை முழு கொள்ளளவுடன் தொடங்கினால், 1600 மெட்ரிக் தொன் டீசல், 550 மெட்ரிக் தொன் பெற்றோல், 950 மெட்ரிக் தொன் மண்ணெண்ணெய் மற்றும் ஜெட் எரிபொருள், 1450 மெட்ரிக் தொன் எரிபொருள் எண்ணெய் மற்றும் 450 மெட்ரிக் தொன் நாப்தா ஆகியவற்றை விநியோகிக்க முடியும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கூறுகிறது.

## 05 அத்தியாவசிய...

பருப்பு, உள்நாட்டு ரின் மீன், பெரிய வெங்காயம், கோதுமை மா, வெள்ளைப் பூண்டு ஆகியற்றின் விலைகள் அனைத்து சதொச விற்பனை நிலையங்களிலும் நேற்றுமுதல் குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக லங்கா சதொச அறிக்கை வெளியிட்டுள்ளது.

| பொருட்கள் | முந்தைய விலை | புதிய விலை |
|---|---|---|
| பருப்பு (01 கி.கி.) | 389.00 | 385.00 |
| ரின் மீன் - உள்நாடு (425 கி.) | 495.00 | 490.00 |
| பெரிய வெங்காயம் (01 கி.கி.) | 199.00 | 190.00 |
| கோதுமை மா (01 கி.கி.) | 265.00 | 250.00 |
| பூண்டு (01 கி.கி.) | 495.00 | 460.00 |

# முட்டைக்கு அதிகபட்ச விலையை நிர்ணயிக்குக!

## மேன்முறையீட்டு நீதிமன்றம் பணிப்பு

முட்டைக்கான அதிகபட்ச விலையை நிர்ணயம் செய்து நுகர்வோர் விவகார அதிகாரசபையால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இடைநிறுத்த உத்தரவிட்ட மேன்முறையீட்டு நீதிமன்றம், முட்டைக்கான அதிகபட்ச விலையை நிர்ணயம் செய்யுமாறு அதிகாரசபைக்கு நேற்று (14) உத்தரவிட்டுள்ளது.

முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தாக்கல் செய்த மனுவை நேற்று மீண்டும் பரிசீலித்த நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. அத்துடன், முட்டைக்கான அதிகபட்ச விலையை நிர்ணயம் செய்யுமாறு அதிகாரசபைக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்த மனு இன்று (15) மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

## இனப்பிரச்சினைக்கு...

கோரிக்கைகள், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வென்ற போர்வையில் சிங்கள மக்களின் பிரச்சினைகளை மூடி மறைக்கின்றன. கடந்த 64 வருடங்களாக இதுவே இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்வரும் பெப்ரவரி 04ஆம் திகதிக்கு முன்னர் அதிகாரப்பகிர்வு குறித்து நாட்டில் ஒன்றுபட்ட தீர்மானத்தை எடுக்கவேண்டுமென நாள் குறித்துள்ளார்.

நாட்டில் கடந்த 64 வருடங்களாக புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு 52 நாட்களுக்குள் தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியும் என அரசு நினைக்குமானால், அவ்வாறு நினைப்பவர்கள் இவ்வுலகில் இல்லை, அவர்கள் வேற்றுலகில் இருக்கிறார்கள் என்றே எம்மால் சொல்லமுடியும். எல்பர்ட் ஐன்ஸ்டைனின் கூற்றின்படி, ஒரு பரிசோதனை வேறு நிபந்தனைகளுக்குட்பட்டு வேறொரு முடிவை எதிர்பார்த்து மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்படுமாயின் அந்தப் பரிசோதனையை மேற்கொள்பவருக்கு பைத்தியம் பிடித்திருக்கிறது என்று. தற்போது அரசும் கடந்த 64 ஆண்டுகளாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான எடுத்த முயற்சிகளின்படி மேற்கொண்டு ஒரே பெறுபேற்றையே பெற்றுள்ளது. தற்போது மீண்டும் அந்த பரிசோதனையையே மேற்கொள்கிறது. இதனால் சொல்லவருவது யாதெனில், அரசுக்கு நன்றாக பைத்தியம் பிடித்திருக்கிறது என்று. இதனை நான் சொல்லவில்லை. எல்பர்ட் ஐன்ஸ்டீன் - என்றார்.

## கடற்றொழிலாளர்கள்...

*(யாழ். செய்தியாளர்)*

கடலட்டைப் பண்ணையை விரைவுபடுத்த வலியுறுத்தி பூநகரியில் நேற்று அமைதிப் பேரணி ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

சுமார் நூற்றுக்கு மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் கலந்துகொண்ட இந்தப் பேரணி இன்று பூநகரி அன்னை மரியாள் தேவாலயத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டு பூநகரி பிரதேச செயலகத்தைச் சென்றடைந்ததுடன், பூநகரி பிரதேச செயலரிடம் மகஜரும் கையளிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் பல்வேறு தொழில் முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்தபோதிலும், தற்போதைய நிலையில், பொருளாதார சுமைகளை எதிர்கொள்ளுமளவிற்கு போதுமானளவு வருமானத்தைப் பெறமுடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால், நல்ல வருமானத்தை ஈட்டித் தரக்கூடிய கடலட்டைப் பண்ணையை அமைப்பதற்கு தீர்மானித்து, அதற்கான விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு சமர்ப்பித்திருப்பதாக தெரிவித்துள்ள கிராஞ்சி கடற்றொழிலாளர்கள், தமக்கான அனுமதிகளை வழங்குவதற்குத் தேவையற்ற கால இழுத்தடிப்பு மேற்கொள்ளப்படுவதாக குற்றஞ்சாட்டியதுடன், தமது ஆதங்கத்தை சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு தெரியப்படுத்தும் வகையில் இந்த அமைதி முறையான பேரணியை மேற்கொண்டதாக தெரிவித்துள்ளனர்.

மேலும், கிராஞ்சி பகுதியைச் சேர்ந்த சுமார் 40 கடற்றொழிலாளர்கள், சம்பந்தப்பட்ட திணைகளங்களின் ஆய்வு அறிக்கைகளுக்கமைவாக, தாங்கள் பூர்வீகமாக கடற்றொழிலில் ஈடுபட்ட பகுதிகளில், அமைத்திருக்கும் கடலட்டைப் பண்ணைகளை, சட்டவிரோதப் பண்ணைகளாக காண்பித்து, குறுகிய நோக்கம் கொண்ட சிலர் மேற்கொண்டு வருகின்ற போராட்டத்திற்கும், இன்றைய பேரணியில் கலந்துகொண்டோர் தமது கண்டனத்தினை வெளிப்படுத்தினர்.

கிராஞ்சியில் கடலட்டைப் பண்ணைகளுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடுவோர், பினாமிகளின் பெயரில் கடலட்டைப் பண்ணைகளை அமைத்துள்ளதாக தெரிவித்த கடற்றொழிலாளர்கள், கிராமத்தைச் சேர்ந்த அனைவரும் கடலட்டைப் பண்ணைகளை அமைத்து பொருளாதார ரீதியில் வலுவடைந்தால், கிராஞ்சி கிராமத்தில் தமது ஆதிக்கம் கைநழுவிப் போய்விடும் என்று அஞ்சுகின்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சிலரே போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாகவும் குற்றஞ்சாட்டினர்.

அத்துடன், அநீதியான முறையில் மேற்கொள்ளப்படுகின்ற போராட்டத்திற்கு, குறுகிய அரசில் நலன்களுக்காக ஆதரவு தெரிவித்த அரசியல்வாதிகளுக்கும், கடற்றொழில் சங்கப் பிரதிநிதிகளுக்கும் எதிரான பதாகைகளும் இனறைய பேரணியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ரூ.35 கோடி...

சந்தேகநபர்கள் மற்றும் ஹெரோயின் ஆகியவை மேலதிக விசாரணைகளுக்காக முல்லேரிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக விசேட அதிரடிப்படை மேலும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், 'ஜிலே' என்று அழைக்கப்படும் பொன்னம்பெரும ஆரச்சிகே தனுஷ்க புத்திக இந்தியாவிற்கு தப்பிச்சென்று தலைமறைவாகியுள்ளதாக பாதுகாப்பு தரப்பினருக்கு தகவல் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## காணாமலாக்கப்பட்டவர்கள்...

இந்த கலந்துரையாடல் நன்றாக நடைபெற்றது. காணாமலாக்கப்பட்டவர்கள் அனைவரையும் நீங்கள் கொன்றுவிட்டீர்கள் என்பது எமக்குத் தெரியும். ஆனால் என்ன நடந்ததென்ற உண்மை கண்டறியப்பட்டு பொறுப்புக்கூறல் நிச்சயமாக நிறைவேற்றப்பட வேண்டும்.

யுத்தம் நிறைவடைந்து 10 வருடங்களின் பின்னர் இப்போதுதான் நல்லிணக்க மாநாட்டைக் கூட்டியிருக்கின்றீர்கள். இதற்கு நாங்கள் ஒத்துழைப்புகளை வழங்கத் தயார்.

தமிழ் மக்களின் அபிலாஷைகள் நிறை வேற்றப்பட வேண்டும். காணாமல்போனோர் தொடர்பில் இனியும் கதைக்க வேண்டாம். காணாமல் போனவர்களைக் கொன்றது நீங்கள். அதனால் இதைப் பற்றி கதைப்பதில் பிரயோசனம் இல்லை. அதனால் இந்த விடயத்திற்கு முடிவு கொண்டுவந்து அந்தக் குடும்பங்களுக்கு என்ன செய்யலாம் என்று யோசனை செய்யுங்கள். காணாமல்போனோர், காணாமல்போனோர் என்று பாட்டு பாடி காலத்தை இழுத்தடித்து நீடிக்கவேண்டாம்.

தற்போது சிறையில் அடைத்து வைக்கப் பட்டுள்ள அரசியல் கைதிகள் நீண்டகாலம் வாடுகின்றார்கள். அவர்களை விடுவியுங்கள் என்று எடுத்துக் கூறியுள்ளேன். அரசியல் தீர்வு, காணி தொடர்பான பிரச்சினை, அனைத்து மாவட்டங்களிலும் காணிகள், இராணுவத்தினர், வனவளத் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் ஆகியோரால் மகாவலி திட்டத்தால் சுவீகரிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் மாசி மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் முழுக் காணிகளும் விடுவிக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளேன் - என்றார்.

## வழமைக்கு...

இந்திய வளிமண்டலத்தில் ஏற்பட்ட தூசு அடங்கிய காற்று, வங்காள விரிகுடாவில் உருவாகிய சூறாவளியின் வேகத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக இலங்கை வான் பரப்பை நோக்கி வீசியது.

இதனால் இலங்கை வளிமண்டலப் பகுதியில் வளிமாசு ஏற்பட்டது. கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளில் வளிமாசு தரக்குறியீடு அதிகரித்தது எனவும் சுற்றுச்சூழல் திணைக்களப் பணிப்பாளர் சரத் பிரேமசிறி சுட்டிக்காட்டினார்.

இதனால் சுகாதார ரீதியிலான பாதிப்புகள் ஏற்படக்கூடும் எனவும் அண்மையில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இந்நிலையில், தற்போது வளிமண்டல மாசு படிப்படியாகக் குறைந்து இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருப்பதாகவும், விரைவில் இந்நிலை சீரடைந்துவிடும் எனவும் சரத் பிரேமசிறி மேலும் தெரிவித்தார்.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் நேற்று வெளியிட்டிருந்த காற்று தரச்சுட்டெண் குறித்த புள்ளிவிபரங்களின்படி, கொழும்பு உள்ளிட்ட நாட்டின் முக்கிய நகரங்களின் காற்று தரச்சுட்டெண் பிற்பகல் வேளையில் 2 புள்ளியளவில் குறைவடைந்திருந்தமை பதிவாகியிருந்தது.

அதன்படி, பிற்பகல் வேளையில் யாழ்ப்பாணம் - 2, முல்லைத்தீவு - 16, ஹம்பாந்தோட்டை -16, புத்தளம் - 32, தம்புள்ளை -25, பதுளை -21, பத்தரமுல்லை - 33, மன்னார் - 34, பொலன்னறுவை - 57 என்ற புள்ளி அளவுகளில் காணப்பட்டது. இதில் பொலன்னறுவையில் மாத்திரமே சற்று அதிகரித்த குறியீட்டை காட்டுவதாக அமைந்திருந்தது.

காற்றுத் தரச்சுட்டெண் தரவின்படி, 0 - 50 காற்றின் தரம் இருப்பின் திருப்திகமானது எனவும், 50 -100 வரை ஏற்றுக்கொள்ளக்கூடியது என்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் அறிவித்திருந்தது.

இதன்படி நேற்றைய காற்றின் தரச்சுட்டென் புள்ளிவிவரங்கள் ஆரோக்கியத்தை ஏற்படுத்தக்கூடியதாகவே இருந்தமை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் வெளியிட்ட புள்ளிவிவரங்களில் அறியக்கூடியதாக இருந்தது.

## தமிழர் கோரிக்கைகள்...

அரசமைப்பிலும், சட்டத்திலும் உள்ள அதிகார பகிர்வு சம்பந்தமான விடயங்களை முழு அளவில் நடைமுறைப் படுத்துவது தொடர்பில் ஜனவரியில் ஜனாதிபதி ஒதுக்கும் ஒரு திகதியில் மீண்டும் கூடிப் பேசி தீர்மானங்களை எடுப்பதென நேற்றுத் தீர்மானிக்கப்பட்டது. எனினும் மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும் என்ற கோரிக்கை தொடர்பில்... எந்தவொரு தீர்மானமும் நேற்று எட்டப்பட வில்லை. ஜனவரி கூட்டத்தில் இதுகுறித்து தொடர்ந்து ஆராயப்படலாம் என நம்பப்பட்டது.







இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில், ஏற்கனவே பல மட்டங்களில் பேசியாகிவிட்டது. அவை தொடர்பில் கூடி பேசி ஒரு முடிவை எடுத்தால், அந்த முடிவைச் செயல்படுத்தவே கால அவகாசம் தேவைப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட எல்லோராலும் வலியுறுத்தப்பட்டது. எனவே, எதிர்வரும் பெப்ரவரி நாலாம் திகதி சுதந்திர தினத்திற்கு முன்னர் என்ன அடிப்படையில் தீர்வு என்பதை ஓரிரு தடவைகள் கூடி பேசி இறுதி செய்ய வேண்டும். அதனடிப்படையில் தீர்வை எட்டுவது அல்லது தீர்வு காண்பதற்கான ஒரு முடிவை எட்ட முடியவில்லை என்ற இயலாமையை பெப்ரவரி 4ஆம் திகதி 75ஆவது சுதந்திர தினத்தின்போது ஜனாதிபதி அறிவிக்க வேண்டும்.

எனினும், தமிழர் தரப்பின் பிரதான கோரிக்கையான உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டி தீர்வு என்ற விடயம் இந்த கூட்டத்தில் பரிசீலிக்கப்படவோ கவனத்தில் எடுக்கப்படவோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

- இவையே நேற்றுமுன்தினம் நடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட பிரதான தீர்மானங்களாகும்.

நல்லிணக்கத்துக்கான இந்த சர்வகட்சி கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, மஹிந்த ராஜபக்ஷ, இரா. சம்பந்தன், டக்ளஸ் தேவானந்தா, விஜேதாச ராஜபக்ஷ, மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், ஜீ.எல்.பீரிஸ், செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரின் பங்கேற்புடன் நடைபெற்ற இக்கூட்டத்தில் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்களும், அவர்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி என்பன மட்டுமே கூட்டத்தை புறக்கணித்தன. விமல் வீரவங்ச, உதய கம்மன்பில்ல, வாசுதேவ நாணயக்கார போன்றோரும் கூட்டத்துக்கு வந்திருக்கவில்லை.

இந்த சந்திப்பு தொடர்பாக மேலும் வெளியான செய்திகள் வருமாறு:-

வடக்கு, கிழக்கில் நிலவும் காணிப்பிரச்சினை, காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை என்பவற்றுக்கு 2023 பெப்ரவரி 4ஆம் திகதிக்குள் தீர்வை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற சர்வகட்சி கூட்டத்தில் இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

எனினும், அதிகாரப்பகிர்வு சம்பந்தமாக உறுதியான முடிவெதுவும் எடுக்கப்படவில்லை.

சமஷ்டி கட்டமைப்பிலான தீர்வை - அதிஉச்ச அதிகாரப்பகிர்வை தமிழ்த் தேசியக் கட்சிகள் எதிர்பார்த்துள்ள நிலையில், ஒற்றையாட்சிக்குள் 13ஆவது திருத்தச்சட்டத்தை அடியொட்டிய தீர்வையே தென்னிலங்கை சிங்கள கட்சிகள் பரிந்துரைத்துள்ளன.

இதில் வடக்கு, கிழக்கு இணைப்பு ஏற்றுக்கொள்ளப்படவில்லை. குறிப்பாக, வடக்கு - கிழக்கு இணைப்புக்கு அமைச்சர் ஹாபீஸ் நஷீர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

மேற்படி கலந்துரையாடலின்போது,

வடக்கு, கிழக்கில் படையினர், வன இலாகா திணைக்களம், மகாவலி ஆகியவற்றால் அபகரிக்கப்பட்டுள்ள மக்களின் காணிகள் பெப்ரவரி 4ஆம் திகதிக்குள் விடுவிக்கப்பட வேண்டும் எனவும், தமிழ் அரசியல் கைதிகள் முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும் எனவும் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன், காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் கதைகளைக் கூறி, நாடகங்களை அரங்கேற்றாமல், அவர்களின் குடும்பத்தாருக்கு நீதியை நிலைநாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவும் எனவும் சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

இப்பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வைக் காண ஏனைய கட்சிகளும் பச்சைக்கொடி காட்டியுள்ளன. சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

2023 பெப்ரவரி 4 ஆம் திகதியை நீங்கள் கால எல்லையாக அறிவித்துள்ளீர்கள். அதனையே காலக்கெடுவாக நிர்ணயித்துக்கொள்ளுங்கள் எனவும் கூட்டமைப்பு தரப்பில் எடுத்துரைக்கப் பட்டுள்ளது.

"ஆம், அதற்குள் இணக்கத்துக்கு வர வேண்டும். இல்லாவிட்டால் இல்லையென அறிவிக்க வேண்டும். அப்போது நாடாளுமன்றம் ஊடாக அடுத்தகட்ட நகர்வை முன்னெடுக்கலாம்" என ஜனாதிபதி பதிலளித்துள்ளார் என தெரியவருகின்றது.

புதிய அரசிலமைப்பை பெப்ரவரி 4ஆம் திகதிக்குள் இயற்ற முடியாது என்பதால், அதிகாரப்பகிர்வு சம்பந்தமாக இணக்கப்பாட்டு ஆவணமொன்றை வெளியிடலாம் என கூட்டமைப்பு தரப்பில் யோசனை முன்வைக்கப் பட்டுள்ளது.

ஒற்றையாட்சிக்குள் 13 ஐ மையப்படுத்திய அதிகாரப்பகிர்வுக்கே ஐக்கிய மக்கள் சக்தி சாதக நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது. 13ஐ முழுமையாக அமுல்படுத்தி, அதனை ஆரம்பப் புள்ளியாக வைத்து அடுத்தகட்டம் நோக்கி நகரலாம் என சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் மனோ கணேசன் கருத்து வெளியிட்டார்.

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதுபோல, படையினரையும் விடுவித்து, இப்பிரச்சினைக்கு தீர்வை காணலாம் என சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். 2ஆம் சுற்றுப் பேச்சுக்கான உறுதியான நாள் நிர்ணயிக்கப்படவில்லை. அது ஜனவரி ஆரம்பத்தில் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஐ.எம்.எவ். நிதி...

நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கடன் நிலைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக 2.9 பில்லியன் டொலர் கடன் வசதியைப் பெறுவதற்கு, இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் கடந்த ஜூன் மாதம் ஊழியர்கள் மட்ட இணக்கப்பாட்டிற்கு வந்திருந்தனர்.

இந்த ஆண்டு இறுதிக்குள் இருதரப்பு ஒப்பந்தம் முடிவுக்கு வரும் என கடந்த செப்டெம்பர் மாதம் இலங்கை அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டிருந்தது. எனினும், அந்தப் பேச்சுவார்த்தைகள் மந்த கதியில் இடம்பெறுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## தரம் 05...

இருக்கும் என திணைக்களம் அறிவித்துள்ளது. அதனடிப்படையில் பரீட்சை தொடர்பான கருத்தரங்குகள், விரிவுரைகள், செயலமர்வுகள் மற்றும் பரீட்சைக்கான மாதிரி வினா பிரதிகளை விநியோகம் செய்தல், பரீட்சை வினாக்கள் வழங்கப்படும் என சுவரொட்டிகள், பதாகைகள், பிரசுரங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் அல்லது சமூக ஊடகங்கள் ஊடாக விளம்பரப்படுத்துதல் தடை செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி.தர்மசேன தெரிவித்துள்ளார்.

## இலங்கையின்...

வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2023ஆம் ஆண்டு ஜனவரிமுதல் நடைமுறைக்கு வரும் வகையிலேயே இலங்கையின் மூலோபாயத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது, இலங்கையின் தேசிய கொள்கைக் கட்டமைப்பு மற்றும் 2023-2027க்கான ஐக்கிய நாடுகளின் நிலைபேண்தகு அபிவிருத்தி ஒத்துழைப்புக் கட்டமைப்பு ஆகியவற்றுடன் இணைந்ததாக முன்னெடுக்கப்படும்.

மேலும் இத்திட்டமானது, நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்கு 2இற்கிணங்க, 2030ஆம் ஆண்டளவில், உணவு பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட போசாக்கு எனும் இலக்கை அடைவதற்கேற்ப நாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும், இம்மூலோபாயத் திட்டம் நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளான 1, 5, 10 மற்றும் 13 ஆகியவற்றின் முன்னேற்றத்துக்கும் நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்கு 17இற்கமைய தேசிய மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி பதில் கூட்டாண்மையை வலுப்படுத்துவதற்கும் உதவும்.

இதேவேளை, உணவுப் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட போஷாக்கை அடைவதற்கும் 2030ஆம் ஆண்டளவில் நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக அதன் நிகழ்ச்சி நிரலுடன் ஒன்றிணைத்து செயற்படுவதற்கும், இலங்கை அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகளை உலக உணவுத் திட்டம் வரவேற்றுள்ளது.

உணவுப் பற்றாக்குறையால் ஏற்படக்கூடிய மோசமான நிலையை குறுகிய காலத்தில் குறைப்பதற்காகவும் நாட்டின் உணவு பாதுகாப்பு மற்றும் போசாக்கு நிலைமையை முன்னேற்றுவதற்காகவும் இலங்கை முன்னெடுத்துவரும் தேசிய மட்டத்திலான முயற்சிக்கு உதவும் வகையில் முன்னெடுக்கப்பட்ட இரண்டாவது கூட்டத்தொடரின்போதே இலங்கையின் மூலோபாய திட்டத்திற்கு உலக உணவு திட்டம் அங்கீகாரம் அளித்ததாக ரோமிலுள்ள அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் டேவிட் எம். பீஸ்லி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில், உணவு பாதுகாப்பு மற்றும் போசாக்கிற்காக அரசாங்கம் செய்துள்ள முதலீட்டின் மூலம் கிடைக்கும் பலனை பன்மடங்கு அதிகரிப்பதற்கு அவசியமான தொழில்நுட்ப உதவி மற்றும் கொள்கைரீதியான ஆலோசனைகளை வழங்க உலக உணவுத் திட்டம் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

உலக உணவுத் திட்டத்திற்கு தன்னார்வ நன்கொடையாளர்களால் நிதியளிக்கப்படுகிறது. எனவே, இலங்கையின் மூலோபாய திட்டங்களுக்காக உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்படும் பங்களிப்பானது நன்கொடையாளர்களால் உலக உணவுத் திட்டத்திற்கு வழங்கப்பட்ட நிதி மூலமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் தேசிய மலர் எது? நீலோற்பலமா?

## சுற்றாடல் அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் கலந்துரையாடப்பட்டது

### சரியான தேசிய மலரைத் தீர்மானிப்பதற்கு நிபுணர்கள் குழுவை நியமிக்கவும் நடவடிக்கை









இலங்கையின் தேசிய மலர் அல்லி மலரா? அல்லது நீலோற்பலமா? (நில் மானல்) என்பது தொடர்பில் சுற்றாடல் அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் கலந்துரையாடப்பட்டது. அமைச்சர் நசீர் அஹமட் தலைமையில் அண்மையில் நடைபெற்ற சுற்றாடல் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தாவரவியல் துறையின் சிரேஷ்ட பேராசிரியர் தீப்தி யகந்தாவல, வயம்ப பல்கலைக்கழத்தின் விவசாய மற்றும் பெருந்தோட்டமுகாமைத்துவ பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் கபில யகந்தாவல ஆகியோர் பல ஆண்டுகளாக தீர்மானம் எடுக்கப்படாது சர்ச்சையில் காணப்படும் இலங்கையின் தேசிய மலர் குறித்த விடயம் தொடர்பில் நீண்ட விளக்கமளித்தனர்.

பேராசிரியர் யகந்தாவல முன்வைத்த கருத்துகளின்படி 1986ஆம் ஆண்டு பெப்ரவரி 26ஆம் திகதி இலங்கையின் தேசிய மலர் தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கமைய தேசிய மலர் நீலோற்பலம் (நில் மானல்) என்பது உத்தியோகபூர்வமாக அமைச்சரவைப் பத்திரம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதும் நீலோற்பலத்தை சித்திரிக்கும் விதத்தில் ஊதா நிறம் சார்ந்த அல்லி மலரின் புகைப்படமே பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் இது உண்மையான நீலோற்பலம் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

1986ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்தத் தவறு பேராசிரியர் உள்ளிட்ட குழுவினரால் 2010ஆம் ஆண்டு அப்போதிருந்த ஜனாதிபதி, சுற்றாடல் அமைச்சர், சுற்றாடல் அமைச்சின் செயலாளர் மற்றும் உயிர்பல்வகைமை செயலகம் ஆகியவற்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய 2015ஆம் ஆண்டு தேசிய மலர் குறித்த சரியான படம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இருந்தபோதும் 2015ஆம் ஆண்டு சுற்றாடல் அமைச்சால் சரியான மலரின் புகைப்படம் வெளியிடப்பட்டிருந்தபோதும், இலங்கையின் தேசிய மலரின் சிங்களப் பெயர் மானல் மலர் (அல்லி மலர்) என்றும், ஆங்கில மொழியில் புளூ வோட்டர் லில்லி என்றும் தமிழில் நிலோற்பலம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கள மொழியில் புலமைபெற்ற பேராசிரியர் விமல் ஜீ. பலகல்லவின் நிலைப்பாட்டுக்கு அமையவே நீலோற்பலம் (நில் மானல்) என்ற பெயருக்குப் பதிலாக தேசிய மலராக மானல் (அல்லி) எனப் பெயரிடப்பட்டுள்ளது என சுற்றாடல் அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர். அவரது கருத்துப்படி, அல்லி என்பது உன்னதமான நீல மலர் என்பதால் தேசிய மலரின் சிங்களப் பெயரை மானெல் (அல்லி) எனப் பயன்படுத்த வேண்டும் எனக் கூறியதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

தாவர வகைப்பாட்டின் உலகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தரநிலைகளின்படி, அறிவியல் பெயர் மாற்றத்திற்கு உட்பட்டிருக்கலாம், ஆனால், மிக நீண்ட வரலாற்றைக்கொண்ட சாதாரண மக்களில் பயன்படுத்தப்படும் பொதுவான பெயர்களை மாற்றக்கூடாது என்று வலியுறுத்தினார்.

அல்லி என்பது ஒரு பொதுவான பெயர் எனவும், இலங்கையில் ஊதா நிற அல்லிகள், வெள்ளை அல்லிகள், நீல அல்லிகள் என பல வகையான அல்லிகள் இருப்பதால், இலங்கையின் தேசிய மலராக நிலோற்பல மலரை தெரிவுசெய்ய வேண்டும் எனவும் இரு பேராசிரியர்களும் தெரிவித்தனர்.

1986இல் தேசிய மலரைத் தெரிவுசெய்த குழுவினால் பரிலீலிக்கப்பட்ட அளவுகோல் களான, பூர்வீகம் மற்றும் தனித்தன்மை, பயன்பாடு, வரலாற்று மற்றும் கலாசார முக்கியத்துவம், தோற்றம் மற்றும் விரிவாக்கம் என்பவற்றுடன், மேலதிக அளவுகோல்களான நிறம் மற்றும் வடிவம், இனப்பெருக்கம் மற்றும் வேறொரு நாட்டின் தேசிய மலராக இல்லாமை போன்ற சகல அடிப்படைகளையும் பூர்த்திசெய்யும் மலராக நீலோற்பலம் காணப்படுவதாக பேராசிரியர் குறிப்பிட்டார்.

நீலோற்பலம் மலருக்குப் பதிலாக தவறான அல்லி மலரின் படத்தையே முத்திரைப் பணியகம் வெளியிட்டிருப்பதாக பேராசிரியர் தீப்தி யகந்தாவல குறிப்பிட்டார். பாடப் புத்தகங்களில் தவறான மலரின் படம் இருப்பதாகவும், பாடசாலைகளில் மாத்திரமன்றி சில உயர்கல்வி நிறுவனங்களிலும் தவறான மலரின் படத்தைக் காட்டி பாடம் நடத்தப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், புத்தகங்களில் மட்டுமின்றி வழிபாட் டுத்தலங்களுக்கு அருகில் நீலோற்பலம் (நில் மானல்) என விற்கப்படுபவை கூட உண்மையான நீலோற்பல மலர்கள் அல்ல என்பதும் இந்த இரு ஆய்வாளர்களின் கருத்தாக இருந்தது.

இதனைப் பரிசீலித்து பரிந்துரைகளை வழங்குவதற்காக பிரதமரால் நிபுணர்கள் குழுவொன்று நியமிக்கப்பட்டிருப்பதாக குழுவின் தலைவர் அமைச்சர் குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயம் என்பதால் விரைவில் உறுதியான தீர்மானத்தை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினர்.

இது தவிர, சுற்றுச்சூழல் அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களின் செயல்பாடுகள் குறித்தும் ஆலோசனைக் குழுவில் விரிவாக ஆராயப்பட்டது. பல்வேறு திட்டங்களுக்கு சுற்றாடல் அமைச்சிடமிருந்து உரிமம் பெறுவது, அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களால் நடமாடும் சேவைகளை முன்னெடுப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இந்த சந்திப்பில் பல நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டதுடன், சுற்றாடல் அமைச்சின் செயலாளர் வைத்திய கலாதிதி அனில் ஜாசிங்க உட்பட சம்பந்தப்பட்ட நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

2015இல் அமைச்சரவைப் பத்திரத்தில் உள்வாங்கப்பட்ட நீலோற்பல மலரின் புகைப் படம் என பேராசிரியர் யகந்தாவலவினால் அனுப்பப்பட்ட படம் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## வி.பி.கணேசன் நினைவு நிகழ்வு சனிக்கிழமை

தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை காலை 11 மணிக்கு ஜிந்துப்பிட்டி நீதிராஜா மண்டபத்தில் வி.பி.கணேசன் ஞாபகார்த்த பேருரையும், தந்தை செல்வா அறநெறி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சியும், கண்பரிசோதனை செய்தவர்களின் கண்ணாடி வழங்கும் நிகழ்வும் மற்றும் கிராம சேவையாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஊடகவியலாளர்கள், வங்கி முகாமையாளர்கள் ஆகியோருக்கு பொற்மணி செம்மல் விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறும்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணியின் கொழும்பு மாநகர சபை உறுப்பினர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். ஞாபகார்த்த பேருரையை தம்பிஐயா தேவதாஸ் நிகழ்த் துவார்.

இதற்கான ஒழுங்குகளை மன்ற பிரதித் தலைவர் ரவிந்திரன், முன்னாள் தலைவர் ராஜா, செயலாளர் தளையரட்ணம், நிர்வாகச் செயலாளர் திருமதி புவனேஸ்வரி ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

## போதைப்பொருளுக்கு அடிமையான மாணவர்களை விடுவித்து நல்வழிப்படுத்த விசேட வேலைத்திட்டம்



(எஸ்.கணேசன்)

நுவரெலியா மாவட்டத்தில் நகர மற்றும் தோட்டப் பகுதிகளிலுள்ள சில பாடசாலை களில் போதைப்பொருளுக்கு அடிமையான மாணவர்களை அதிலிருந்து விடுவித்து, நல்வழிப் படுத்துவதற்கான விசேட வேலைத்திட்டம், கொட்டகலை வர்த்தக சங்கத்தால் நேற்று (14) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மேற்படி சங்கத்தின் தலைவர் வி.புஷ்பா தெரிவித்தார்.

கொட்டகலை நகரம் மற்றும் அதனை அண்மித்த தோட்டப்பகுதிகளிலுள்ள பாடசாலை மாணவர்கள் சிலர், போதைப்பொருட்களை பாவித்து வருவதாக சம்பந்தப்பட்ட பாடசாலை களின் அதிபர்களால் திம்புள்ள - பத்தனை பொலிஸார் மற்றும் வர்த்தக சங்கத்தினரின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளனர். இந்நிலை யிலேயே மாணவர்களை பாதுகாப்பதற்காக விசேட குழுவொன்றை அமைத்து, அதனூடாக வேலைத்திட்டத்தை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய அபாயகர மருந்துகள் கட்டுப்பாட்டு சபையின் நுவரெலியா மாவட்ட இணைப்பதிகாரி எஸ்.எஸ்.டபிள்யூ.விஜேரத்னவால், பொலிஸ் அதிகாரிகள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் சிவில் பிரதிநிதிகளுக்கு இதுபற்றி தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, பாடசாலை மாணவர்களுக்கு மிகவும் சூட்சுமமான முறையில் போதைப்பொருட்களை விநியோகிக்கும் இடங்களை அடையாளம் கண்டு, சட்டரீதியான நடவடிக்கையை மேற்கொள்வதற்கும், போதைக்கு அடிமையான மாணவர்கள் தொடர்பில் விழிப்பாக இருக்கவேண்டும் எனவும் எஸ்.எஸ்.டபிள்யூ. விஜேரத்ன கூறியுள்ளார்.

பாடசாலைக்குள் போதைப்பொருட்கள் உள்நுழைவதை முற்றாக தடுப்பதற்கு அதிபர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட கல்வி சமூகத்தினர் மற்றும் பெற்றோரின் ஒத்துழைப்பு அவசியம் எனவும், பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்குவைத்து போதைப்பொருள் விற்பனை, விநியோகத்தில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் தகவல் இருந்தால் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு தெரியப்படுத்துமாறும் அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

## இந்திய கடற்படைத் தளபதி பாதுகாப்புச் செயலர் சந்திப்பு



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் ஆர். ஹரி குமார் கோட்டே ஸ்ரீ ஜயவர்தனபுரவிலுள்ள பாதுகாப்பு அமைச்சில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவை சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பின்போது கடற்படைத் தளபதி மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான இராணுவ இராஜதந்திரம் தொடர்பில் கருத்துகளை பரிமாறிக்கொண்டனர்.

சந்திப்பைத் தொடர்ந்து, கடற்படைத் தளபதியும் பாதுகாப்புச் செயலாளரும் நினைவுச் சின்னங்களைப் பரிமாறிக் கொண்டனர், அதன் பின்னர், வருகை தந்த கடற்படைத் தளபதி, பாதுகாப்பு அமைச்சுக்கான விஜயத்தைக் குறிக்கும் வகையில் பார்வையாளர்கள் புத்தகத்தில் தனது கையொப்பத்தை இட்டார்.

இந்நிகழ்வில் இலங்கையில் பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பு அதிகாரி மேஜர் ஜெனரல் தினேஷ் நாணயக்காரவும் கலந்துகொண்டார்.

## உணவு பாதுகாப்பின்மை மற்றும் மந்த போசனையிலிருந்து விடுவிக்கும் வகையில் உள்ளூர் உற்பத்திக் கண்காட்சி







(மன்னார் நகர் நிருபர்)

நாட்டையும் மன்னார் மாவட்டத்தையும் உணவு பாதுகாப்பின்மை மற்றும் மந்த போசனையிலிருந்து விடுவிக்கும் வகையில் மன்னார் மாவட்ட செயலகம் ஏற்பாடு செய்த உள்ளூர் உற்பத்திகளுக்கான வர்த்தகக் கண்காட்சியும் விற்பனையும் நேற்று புதன்கிழமை(14) காலை 10.30 மணியளவில் மன்னார் மாவட்ட செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள், சமுர்த்தி திணைக்களம்,விவசாய திணைக்களம், கமநல அபிவிருத்தித் திணைக்களம், சுகாதார திணைக்களம், கால்நடை சுகாதார திணைக்களம், பனை அபிவிருத்தி சபை மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்குபற்றுதலோடு, உள்ளூர் உற்பத்திகளுக்கான வர்த்தகக் கண்காட்சியும் விற்பனையும் இடம்பெற்றன.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் குறித்த கண்காட்சியும் விற்பனையும் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இதன்போது பிரதேச செயலாளர்கள், அழைக்கப் பட்ட திணைக்களத் தலைவர்கள் கலந்துகொண்டனர். இதன்போது பிரதேச செயலாளர் பிரிவுகளில் வீட்டுத்தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் பயனாளிகளுக்கு விதைகள் வழங்கும் வகையில், பிரதேச செயலாளர்களிடம் ஒருதொகை விதைகள் கையளிக்கப்பட்டன.

உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையிலும் அவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்தும் வகையிலும் குறித்த உள்ளூர் உற்பத்திகளுக்கான வர்த்தகக் கண்காட்சியும் விற்பனையும் இடம்பெற்றன.






**இந்தியாவின் பசுமை வாசல் பவுண்டேஷனால் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட மரக்கன்றுகள் நடும் போட்டியில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சாய்ந்தமருது அல்-ஹிலால் பாடசாலையில் தரம் 1Dஇல் கல்வி பயிலும் மாணவி முகம்மது ஸாகிர் பாத்திமா அனீகா வெற்றிபெற்று "வெண்புறா பசுமைச் சுடர்" எனும் இந்திய விருதை பெற்றுக்கொண்டார்.**

***(படம்:- எம்.எஸ்.எம்.ஸாகிர்)***

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது

**(அநுராதபுரம் செய்தியாளர்)**

சட்டவிரோதமான முறையில் உள்ளூரில் தயாரித்த துப்பாக்கியொன்றை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை மீகலாவ பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக் கமைய 13ஆம் திகதி இரவு மீகலாவ பொத்தானேகம பகுதி வீடொன்றில் நடத்திய சுற்றிவளைப்பின்போது சந்தேக நபரை கைது செய்துள்ளதுடன், துப்பாக்கியையும் மிகலாவ பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்டவர் 43 வயதுடைய கல்னேவ பகுதியை வசிப்பிடமாகக்கொண்டவர் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை களை மீகலாவ பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

## வைத்தியசாலை மாடியிலிருந்து குதித்து நோயாளி தற்கொலை

### களுபோவிலயில் சம்பவம்

களுபோவில போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நோயாளி ஒருவர் நேற்று (14ஆம் திகதி) காலை நான்காவது மாடியிலிருந்து குதித்துள்ளார். அவர் உயிரிழந்துள்ளதாக கொஹுவல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இறந்தவர் கோணபொல கந்தேவத்த பகுதியில் வசிக்கும் சந்ரசோம (வயது 65 ) என பொலிஸார் தெரிவிக்கின்றனர்

இந்த நோயாளி களுபோவில போதனா வைத்தியசாலையின் மூக்கு மற்றும் தொண்டை நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் வார்டில் தங்கி சிகிச்சை பெற்று வருவதாக கூறப்படுகிறது

நான்காவது மாடியில் தங்கியிருந்த இந்த நோயாளி நேற்றுக் காலை 5.30 மணியளவில் உள்நோயாளிகள் சாப்பிடும் பகுதிக்கு வந்து ஜன்னல் வழியாக குதித்து தற்கொலை செய்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.



**மட்டக்குளி, ஸ்ரீ விக்ரமபுர பிரதேசத்தில் நேற்று (14) காலை ஏற்பட்ட தீ விபத்தில் 04 வீடுகள் சேதமடைந்துள்ளன. இதன்போது 02 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மண்ணெண்ணெய் அடுப்பொன்று சரிந்து தீப்பற்றியதால் இந்த தீ விபத்து சம்பவித்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (படப்பிடிப்பு:- மொஹமட் நஸார்)**

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, டிசம்பர் 15ஆம் திகதி, வியாழக்கிழமை

# சீனாவின் ஊடுருவலும் இந்தியாவின் பதற்றமும்!

இந்தியாவின் அருணாச்சலப் பிரதேசத்தில் தவாங்கில் சீன துருப்புகள் கடந்த 9ஆம் திகதி ஊடுருவல் நடத்தியதாகவும், ஒருதலைப்பட்சமாக அங்குள்ள தற்போதைய நிலையை மாற்ற முயற்சித்ததாகவும் இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மக்களவையில் தெரிவித்தார்.

அருணாச்சலப் பிரதேசத்தில் தவாங் செக்டாரிலுள்ள யாங்ட்சே பகுதியில் உண்மையான எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டின் (எல்.ஏ.சி.) குறுக்கே சீனத் துருப்புகள் ஊடுருவல் நடத்தியதாகவும், ஒருதலைப்பட்சமாக தற்போதைய நிலையை மாற்ற முயற்சித்ததாகவும் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மக்களவையில் தெரிவித்தார்.

இராணுவத்தின் உள்ளூர் தளபதி டிசம்பர் 11 அன்று சீனத் தளபதியுடன் கொடி சந்திப்பை நடத்தினார். அப்போது எல்லையில் அமைதியைப் பேணுமாறு சீனத் தரப்பால் கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்த விவகாரம் சீனத் தரப்பிடம் தூதரக மட்டத்திலும் எழுப்பப்பட்டுள்ளது என்று ராஜ்நாத் சிங் கூறினார். ஜூன் 2020இல் கிழக்கு லடாக்கில் நடந்த கல்வான் சம்பவத்திற்குப் பிறகு இந்தியத் துருப்புகளும் சீனத் துருப்புகளும் சந்தித்த மிக நெருக்கமான மோதல் இதுவாகும்.

கிழக்கு தவாங்கில் யாங்ட்சே என்ற புள்ளிக்கு அருகிலுள்ள தவாங் உயரத்திலுள்ள எல்.ஏ.சி. நெடுகிலும் டிசம்பர் 9 அன்று அதிகாலை 3 மணியளவில் மோதல் ஏற்பட்டது. இராணுவ ஆதாரங்களின்படி, எல்.ஏ.சியின் இந்தப் பகுதி இரு தரப்புகளுக்கும் இடையே 'ஒப்புக்கொள்ளப்பட்ட சர்ச்சைக்குரிய பகுதிகளில்' ஒன்றாகும்.

இந்திய மற்றும் சீனத் துருப்புகள் நுல்லாவின் இருபுறமும் நிலைநிறுத்தப்பட்டுள்ளன, ஆனால், அன்றைய இரவில், சுமார் 300 சீனத் துருப்புகள் இந்தியப் பகுதிக்குள் வந்துள்ளன. ஊடுருவியவர்களைத் திருப்பியனுப்ப 70 முதல் 80 இந்தியத் துருப்புகள் இரவோடு இரவாக விரைவாக அணிதிரண்டன. ஆதாரங்களின்படி, சில மணிநேரம் கட்டைகள் மற்றும் பிரம்புகளுடன் கடுமையான கைகலப்புச் சண்டை நடந்தது.

அருணாச்சல பிரதேசத்திலுள்ள தவாங் பகுதியின் எல்.ஏ.சியை ஒட்டிய சில பகுதிகளில் இரு தரப்புகளும் தங்கள் உரிமைகோரல் வரை ரோந்து செல்லும் பகுதிகள் வேறுபடுகின்றன. 2006இலிருந்து இதுதான் நிலைமை.

ஜூன் 2016இல் இதேபோன்ற மீறல் நடந்தது. அப்போது சுமார் 250 சீன வீரர்கள் அப்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்தனர். ஆனால், பின்னர் எந்த மோதல்களும் பதிவாகவில்லை. வழமையாக ஊடுருவல்கள் நடந்தாலும் இந்த முறை சீன இராணுவம் ஒரு 'சந்தர்ப்பமான' நேரத்துக்காக அத்துமீறலை 'முன்கூட்டியே திட்டமிட்டுள்ளது' என்று இராஜதந்திர வட்டாரங்கள் சொல்கின்றன.

1993 மற்றும் 1996 எல்லை ஒப்பந்தங்களை மீறியதாகக் கூறி, உத்தரகாண்ட் மலைகளிலுள்ள அவுலியில் இந்தியா - அமெரிக்க கூட்டு இராணுவப் பயிற்சியான ஒப்பரேஷன் யுதாபியஸ் நடவடிக்கைக்கு சீனா எதிர்ப்புத் தெரிவித்த சில நாட்களுக்குப் பிறகு இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

இந்திய எல்லையில் பல்வேறு புள்ளிகளில் தொடரும் இராணுவ பதற்றங்கள், சீனாவை உள்ளடக்கிய உலகின் முன்னணி பொருளாதாரங்களின் குழுவான ஜீ20இன் ஒரு பகுதியாக புதுடில்லி தொடர்ச்சியான நிகழ்வுகளைத் தொடங்கியுள்ள நேரத்தில் நிகழ்ந்துள்ளன. கடந்த நவம்பர் மாதம் பாலியில் நடந்த ஜி20 உச்சிமாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடியும், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கும் சந்தித்து மரியாதைகளை பரிமாறிக்கொண்டனர். ஆனால், எந்த முக்கிய பேச்சுவார்த்தைகளும் விவாதங்களும் நடைபெறவில்லை.

இந்தியா - சீனா உறவுகள் குறித்து சமீபத்தில் பேசிய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்ஷங்கர், "எல்லைப் பகுதிகளில் அமைதி நிலவும்வரை. ஒப்பந்தங்களைக் கடைப்பிடிக்காத வரையில், தற்போதைய நிலையை மாற்ற ஒருதலைப்பட்ச முயற்சி இல்லை. நிலைமை சாதாரணமாக இருக்க முடியாது" என்றார்.

இதற்கிடையில் இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீனாவின் யுவான் வாங் 5 என்ற உளவுக் கப்பல் மீண்டும் வந்து சென்றதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியாவை கண்காணிக்க சீனாவின் யுவான் வாங் 5 என்ற உளவுக் கப்பல், அம்பாந்தோட்டை துறைமுகத்தில் கடந்த ஓகஸ்ட் மாதம் நான்கு நாட்கள் நிறுத்த சீனா திட்டமிட்டது. இந்தக் கப்பல் வாயிலாக, தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களின் இராணுவ கட்டமைப்புகளை உளவு பார்க்க, சீனா திட்டமிட்டுள்ளதாக கருதப்பட்டது. இதை அனுமதிக்க வேண்டாம் என இலங்கை அரசுக்கு இந்திய அரசு கோரிக்கை விடுத்தது. இருந்தபோதும் தொடர்ந்து அந்த உளவுக் கப்பல் இலங்கையை நோக்கிப் பயணித்தது.

இந்த பரபரப்பான சூழ்நிலையில் யுவான் வாங் 5 என்ற அதே உளவுக் கப்பல் மீண்டும் இந்தியப் பெருங்கடலை வந்து சென்றதாக தகவல் வெளியாகியுள்ளது. இதை அறிந்த இந்திய கப்பற்படையினர் உளவுக் கப்பலின் செயல்பாட்டை தீவிரமாக கண்காணித்து வந்ததாகவும் கூறப்படுகிறது.

அருணாச்சல எல்லையில் ஊடுருவல் நடந்து இந்திய, சீன போர்ப் பதற்றம் ஏற்பட்டு தணிவதற்குள் இந்தச் செய்தியும் வெளியாகியுள்ளதால் பிராந்தியத்தில் திட்டமிட்டே பதற்றத்தை சீனா ஏற்படுத்துகிறதா என்ற சந்தேகம் இயல்பாகவே எழுகின்றது. இந்த நிலைமை தொடர்வது அவ்வளவு ஆரோக்கியமானதாகப் படவில்லை.

# சந்தையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த முடிந்துள்ளது

## வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் தெரிவிப்பு

**இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டத்தாபனத்தை இலாபகரமாக நடத்திச்செல்ல முடிந்துள்ளது**

**நியாயமான சந்தை அமைப்பை நிறுவும் நோக்கத்துடன் 2003ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க பாவனையாளர் சட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை**







சந்தையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்த அமைச்சால் முடிந்திருப்பதாக வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார். அண்மையில் (05) நடைபெற்ற வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய அமைச்சர் குறிப்பிடுகையில், மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் திறந்த சந்தையின் விலைகளுடன் ஒப்பிடுகையில், நவம்பர் மாதத்தில் அத்தியாவசியப் பொருட்களைக் குறைந்த விலையில் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க முடிந்துள்ளது. இதன்படி, திறந்த சந்தையில் ஜூலை மாதம் ஒரு கிலோகிராம் பருப்பு 595 ரூபாவாகவும், டிசம்பரில் லங்கா சதொச நிறுவனத்தில் ஒரு கிலோகிராம் பருப்பு 389 ரூபாவாகக் குறைந்திருப்பதுடன், திறந்த சந்தையில் 410 ரூபாவாக இருந்த ஒரு கிலோகிராம் கோதுமை மா டிசம்பர் முதலாம் திகதியாகும்போது லங்கா சதொச நிறுவனத்தின் விலை 265 ரூபாவாகக் குறைந்துள்ளதாகவும் கூறினார்.

அத்துடன், 280 ரூபாவாக இருந்த ஒரு கிலோகிராம் வெள்ளை சீனியின் விலையை 229 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் சம்பா அரிசியின் விலையை 225 ரூபாவிலிருந்து 198 ரூபாவாகவும் குறைக்க சதொச நிறுவனத்தால் முடிந்ததாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் பாவனையாளர்களின் பாதுகாப்புக்காக சந்தைகளைக் கண்காணிக்குமாறும், சோதனைகளை நடத்துமாறும் பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் அளக்கும் அலகுகள், தரங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்துக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

அதற்கு மேலதிகமாக, நியாயமான சந்தை முறைமையை நிறுவும் நோக்கில் 2003ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க பாவனையாளர் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்படவிருப்பதாகவும் தெரிவித்தார். பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் தலைவர் உள்ளிட்ட முழுநேர உறுப்பினர்களின் தகுதிகளை இச்சட்டத்திருத்தத்தில் உள்ளடக்க எதிர்பார்த்திருப்பதாகவும், உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு எதிரான பாவனையாளர்களின் முறைப்பாடுளை விசாரிக்கும் முறையை வினைத்திறனாக்கும் பிரேரணைகள் இதில் உள்ளடக்கப்படவிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். மற்றும் வலுவான முறையில். புதிய சரத்துகள் உள்ளிட்ட திருத்தச் சட்டமூலத்தை அடுத்த அமைச்சுசார் ஆலோசனைக் கூட்டத்தில் முன்வைக்கவிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நாட்டு இளைஞர்களை கூட்டுறவுத் துறைக்கு ஈர்க்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது குறித்தும் கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. இளம் தொழில்முயற்சியாளர்களைக் கண்டறிந்து அவர்களை உற்பத்தி செயல்முறைக்கு வழிநடத்தும் வகையில் நிவாரணத் திட்டங்களை கூட்டுறவுத் துறை மூலம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாக குழுவின் தலைவர் தெரிவித்தார். கூட்டுறவுச் சங்கங்களின் வலுவூட்டல் மூலம் சில்லறை மற்றும் மொத்த விற்பனை வலையமைப்பை மேலும் வலுப்படுத்தவும், அறிமுகப்படுத்தவும் எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவித்தார்.

இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டத்தாபனத்தை தற்பொழுது இலாபமீட்டும் நிறுவனமாக நடத்திச்செல்ல முடிந்திருப்பதாகவும், நாட்டுக்குத் தேவையான அமோனியம் நைட்ரஜனை இறக்குமதிசெய்து விநியோகிக்கும் உரிமை எஸ்.ரி.சி. நிறுவனத்திடம் காணப்படுகின்றபோதும், இந்தியாவில் அமோனியம் நைட்ரஜன் ஏற்றுமதிக்குத் தடைவிதிக்கப்பட்டமையால் நாட்டில் வெடிபொருட்களை நம்பியுள்ள தொழில்துறைகள் பாதிக்கப்பட்டன என்றும் இருந்தபோதும் இந்நிறுவனத்தின் ஊடாக அமோனியம் நைட்ரஜன் இறக்குமதி செய்யப்பட்டு மீண்டும் விநியோகிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், நாட்டில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதில் அரசு கவனம் செலுத்தி வருவதாகவும், வருமானத்தை அதிகரிக்கவும், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் பெண் தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் திட்டம் இம்மாதம் தொடங்கப்படவுள்ளதாகவும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

தற்போது பிரதேச செயலக மட்டத்தில் உரிய பயனாளிகளை அடையாளம் காணும் பணிகள் இடம்பெற்று வருவதாகவும், உரிய அடையாளப்படுத்தலின் பின்னர் இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டத்தாபனம் பெண் தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்துவதற்குத் தேவையான உபகரணங்களை வழங்கும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மஹாபொல கல்வி மற்றும் வர்த்தகக் கண்காட்சியறை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பிலும் இங்கு கருத்துத் தெரிவிக்கப்பட்டதுடன், 2023ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இந்தக் கண்காட்சியை மீண்டும் ஆரம்பிக்கவிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான வியாழேந்திரன், காதர் மஸ்தான், ரோஹன திஸாநாயக்க ஆகியோரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர். இது தவிரவும் வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகள் பலரும் இக்கூட்டத்தில் இணைந்துகொண்டிருந்தனர்.



# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமிடம் அரசியலமைப்பு முன்மொழிவு ஆவணம் கையளிப்பு

மறுசீரமைப்புக்கான மக்கள் இயக்கத்தின் அழைப்பாளர்களான சிரேஷ்ட ஊடகவியலாளர் விக்டர் ஐவன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ் ஆகியோர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமை கடந்த திங்கட்கிழமை (12) கட்சியின் 'தாருஸ்ஸலாம்' தலைமையகத்தில் சந்தித்து அரசியலமைப்பு முன்மொழிவு ஆவணமொன்றை கையளித்துக் கலந்துரையாடினர். அதற்கு ஒத்துழைப்பு நல்குமாறும் வேண்டிக்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது,

மூத்த ஊடகவியலாளர் விக்டர் ஐவன் தலைமையிலான சிவில் சமூக இயக்கத்தினர் எங்களை சந்தித்து, தற்பொழுது நாட்டில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலைமைக்கு மத்தியில் நாடாளுமன்றத்தில் இருக்கிற சமன்பாட்டில் என்ன பிரச்சினைகள் இருந்தாலும், நாடாளுமன்றத்தில் இருக்கிற அரசியல் தலைமைகள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து கூட்டாக முயற்சி செய்தால் நாட்டில் புரையோடிப் போயிருக்கின்ற மிக முக்கியமான பிரச்சினைகளை அடையாளம் கண்டு, அவற்றிற்கான தீர்வுகளையும் ஒரு தேர்தல் வரும்வரை காத்திருக்காமல் முடிவுக்கு கொண்டுவருவதற்கான ஒரு முயற்சியை செய்வதற்கு இது நல்ல வாய்ப்பாக இருக்கும் என்ற அடிப்படையில் அதற்கான பொறிமுறை ஒன்றை அவர்கள் எங்களுக்கு சமர்ப்பித்திருக்கிறார்கள்.

எனவே, அந்த பொறிமுறையின் அடிப்படையில் செயல்படுவதற்கு நாங்கள் எத்தனிப்பது நல்லது என்ற அபிப்பிராயத்தை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். அதனடிப்படையில் சில முயற்சிகளை செய்து பார்க்கலாம் என்றிருக்கிறோம்.

ஜனாதிபதி அடுத்த 75ஆவது சுதந்திர தினத்திற்கு முன்பாக நாட்டின் இனப் பிரச்சினைக்கான தீர்வொன்றை நாங்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் கொண்டுவருவதற்கு தான் தயாராகவிருப்பதாக சொல்லியிருக்கிறார். அதற்கான முயற்சிகளை எவ்வாறு செய்வது என்பது சம்பந்தமாக கதைப்பதற்கான எந்த சந்தர்ப்பமாக இருந்தாலும், குறுகிய காலம்தான் இருக்கின்றபோதிலும் இருக்கின்ற அரசியலமைப்பின் அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காவது அரசாங்கம் முன்வருமாகவிருந்தால், அதை அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக்கொண்டு அதற்கு முழு அனுசரணையும் கொடுக்குமாக இருந்தால் ஜனாதிபதியின் முயற்சிகளின் முக்கியமான இலக்குகளை நாங்கள் எட்டிக் கொள்ளமுடியும். இது தவிரவும், இதைவிடவும் முக்கியமான பரந்துபட்ட திருத்தங்கள் அரசியலமைப்புக்குத் தேவையாக இருந்தால் அது சம்பந்தமாக இன்னும் கூடி நாங்கள் கதைத்து அதற்கப்பாலும் நாட்டில் இருக்கிற அரச இயந்திரங்களின் செயல்பாடுகள் சம்பந்தமான ஏனைய விடயங்களிலும் எங்களுடைய கவனத்தைச் செலுத்தலாம்.

தமிழ்த் தரப்பாக இருக்கட்டும், முஸ்லிம் தரப்பாக இருக்கட்டும் கோரிக்கைகளை முன்வைக்கின்ற போது அவர்களின் அபிலாஷைகளின் உச்சகட்ட அபிலாஷைகளைத்தான் முன்வைத்து பேசுவார்கள், அதில் எந்தத் தவறுமில்லை. ஆனால், உச்சக்கட்ட அபிலாஷைகளை வைத்துவிட்டார்கள் என்பதற்காக அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்தபட்ச உடன்பாடுகளைப் பற்றியாவது ஆளும் தரப்பினர், பெரும்பான்மை சமூகம் சிந்திக்கவேண்டும்.

அப்படி சிந்திக்காமல் எடுத்தற்கெல்லாம் தமிழ்த் தலைவர்கள் மீதும், சிறுபான்மைத் தலைவர்கள் மீதும் குற்றம் சுமத்துவதை விட்டும் அவர்களும் சற்று மாற்றமான கருத்துகளை முன்வைக்கவேண்டும் என்பதுதான் எங்களுடைய எதிர்பார்ப்பு - என்றார்.

# இன்றைய நாளில்...

- 1891 – ஜேம்ஸ் நெய்ஸ்மித் கூடைப்பந்தாட்டத்தை முதன் முதலாக அறிமுகப்படுத்தினார்.
- 1960 – மன்னர் மகேந்திரா நேபாளத்தின் அரசைக் கலைத்து நாட்டின் முழு அதிகாரத்தையும் தனதாக்கிக் கொண்டார்.
- 1970 – சோவியத் ஒன்றியத்தின் வெனேரா 7 விண்கலம் வெள்ளி கோளின் மேற்பரப்பில் இறங்கியது. இதுவே வேறொரு கோளின் மீது இறங்கிய முதலாவது விண்கலமாகும்.
- 1994 – இணைய உலாவி நெட்ஸ்கேப் நவிகேட்டர் 1.0 வெளியிடப்பட்டது.
- 1995 – ஈழப் போர்: ஈழத்தமிழருக்கு ஆதரவு தெரிவித்து திருச்சியில் 'அப்துல் ரவூஃப்' என்பவர் தீக்குளித்து இறந்தார்.
- 2001 – பீசாவின் சாயும் கோபுரம் 11 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் திறக்கப்பட்டது.
- 2006 – இலங்கை, கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கொழும்பில் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் கடத்தப்பட்டுக் காணாமல் போனார்.

# நக்கல் நமசிவாயம்

**இந்திய , அமெரிக்க மத்தியஸ்தம் இல்லாம ரணிலோட பேச்சு நடத்தமாட்டம் எண்டு சொன்ன தமிழ்க்கட்சித் தலைவர்மார் பேச்சு மேசையில வாயை மூடிக்கொண்டு சைலன்ஸா இருந்தினமாம்.வாய் இல்லாட்டி நாய் கொண்டுபோடும் எண்டு சும்மாவா சொன்னாங்கள்...**



# வலப்பனை பிரதேசத்திற்கு உட்பட்ட எட்டு கிராமங்களுக்கு மின்சாரம் இல்லை



(ஆ.ரமேஸ்)

நுவரெலியா மாவட்டம், வலப்பனை பிரதேசத்திற்கு உட்பட்ட தெரிப்பெய பொலிஸ் பிரிவு மற்றும் உடபுஸலாவை பொலிஸ் பிரிவு ஆகியவற்றில் எட்டு கிராமங்களுக்கு கடந்த 08ஆம் திகதி காலைமுதல் இதுவரை மின்சாரம் இல்லை என பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த எட்டாம் திகதி வீசிய மினி சூறாவளியினால் தெரிப்பெய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெதிலந்த, பாலகம, உடகம, திக்கல மற்றும் பஸ்பனாவெல ஆகிய கிராமங்களில் பாரிய மரங்கள் மின்கம்பங்கள் மீது முறிந்து வீழ்ந்ததில் மின்சாரம் தடைசெய்யப்பட்டது.

அதேபோல உடப்புஸலாவை பொலிஸ் பிரதேசத்தில் மீப்பனாவ, எம்புலம்பா மற்றும் நுககொட ஆகிய கிராம பகுதிகளிலும் மின்சாரக் கம்பங்களில் மரங்கள் வீழ்ந்து மின் தடை ஏற்பட்டது.

இந்நிலையில், கடந்த எட்டு நாட்களாக மின்சாரக் கம்பங்கள் சீர்செய்து வழமையான மின்சாரம் வழங்க இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுக்கவில்லை என பிரதேச மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

அத்துடன், இக்கிராமப் பகுதிகளுக்கு மின் தடை தொடர்ச்சியாக இருக்கின்ற நிலையில் ஐந்தாம் தரம் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கையை மேற்கொள்ள முடியாது அவதியுறும் நிலையில் உள்ளதாக பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

அதேபோல் இக் கிராமங்களில் மினி சூறாவளிக்கு தமது வீடுகளை இழந்து தற்காலிக பொது தங்குமிடங்கள சிறு குழந்தைகளுடன் வசிக்கும் மக்களும் மின்சாரம் இன்றி பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

அதேநேரத்தில் வலப்பனை பிரதேசத்திற்குரிய இலங்கை மின்சார சபை ஊழியர்கள் திருத்தப் பணிக்கான இப்பகுதிக்கு வாகனத்தில் வருகை தந்து பணிகளை மேற்கொள்ளாது வீதியில் பொழுது போக்கிவிட்டு செல்வதாக பாரிய குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

பிரதேச மக்கள் இது தொடர்பில் கொழும்பு மற்றும் கண்டியிலுள்ள இலங்கை மின்சார சபை தலைமையகத்துக்கு தொடர்புகொண்டு முறையிட்டுள்ளனர்.

இவ்வாறு முறையிட்டுள்ளதால் தலைமையக ஊழியர்களை வரவழைத்து பிரதேசத்திற்கான மின்சார சீர்த்திருத்தப் பணிகளை செய்ய சொல்லுங்கள் என வலப்பனை பிரதேச மின்சார சபை ஊழியர்கள் மக்களிடம் தெரிவித்துள்ளதால் ஆத்திரமடைந்துள்ள பிரதேச மக்கள் வீதிக்கு இறங்கவுள்ளதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# கஞ்சாவை சட்டபூர்வமாக்க பல்வேறு நுட்பமான முறைகள் கையாடல்

## மதுசாரம், போதைப்பொருள் தகவல் நிலைய நிகழ்ச்சித் திட்ட அதிகாரி றகீம் தெரிவிப்பு




இலங்கையில் கஞ்சாவை சட்ட ரீதியாக்குவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடக்கம் பல தரப்பினரும் பல்வேறு நுட்ப முறைகளை கையாண்டு வருகின்றனர் - என மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலைய சிரேஷ்ட நிகழ்ச்சித் திட்ட அதிகாரி எ.சி.றகீம் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் (13) ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் ,

நாட்டில் போதைப்பொருள் தொடர்பில் தற்போது பதிவாகும் சம்பவங்கள் தொடர்பாக விஞ்ஞான ரீதியாக நோக்கும்போது, சிறுவர்கள், இளைஞர்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ள முடியும். குறிப்பாக, புகையிலை உற்பத்திப் பொருட்களான சிகரெட், மாவா, தூள், பான்பராக் போன்ற உற்பத்திப் பொருட்கள் இளைஞர்கள் மத்தியில் காணப்படுவதாக பதிவுகள் இடம்பெற்று வருகின்றன. அதேபோன்று ஐஸ் என கூறப்படும் மெத்தமடமைன் போன்ற போதைப்பொருட்கள் இளைஞர்கள் மத்தியில் பாவனை செய்யப் படுவதாக பதிவாகி வருகின்றன.

தற்போது, எமது நாட்டில் கஞ்சாவை சட்ட ரீதியாக்குவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடக்கம் பல தரப்பினரும் பல்வேறு நுட்ப முறைகளைக் கையாண்டு வருகின்றனர்.

ஏதாவதொரு போதைப்பொருளை விளம்பரப்படுத்துகின்றபோது, குறிப்பிட்ட போதைப்பொருள் மாத்திரமின்றி அனைத்து வகையான போதைப்பொருட்களும் மேலோங்கும்.

மேலும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டுக்கொண்டிருப்பதனால் நாட்டினுள் சிகரெட் பாவனையில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. எனவே, குறிப்பிட்ட உற்பத்தி நிறுவனத்திற்கு தங்களுடைய உற்பத்திப் பொருள் பாவனையை இளைஞர்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்கு ஏனைய போதைப்பொருட்களின் மீது அவதானத்தை செலுத்த முற்படுவதும் இதிலொன்றாகக் கூட இருக்கலாம் - என்றார்.

எனவே அ இத்தருணத்தில் நாம் சிகரெட் மதுசாரம் உட்பட ஏனைய போதைப்பொருள் பாவனையை தடுப்பதற்கு - போதைப்பொருளுக்கு ஏமாறாமல் இருப்பதற்கான எதிர்ப்புச் சக்தியை பிள்ளைகளுக்கு பெற்றுக்கொடுத்தல்,

இணையவழி கல்விச் செயற்பாடுகளின்போது போதைப்பொருள் தூண்டப்படுவது தொடர்பாக பெற்றோர்கள் அவதானமாக இருக்கவேண்டும். சிகரெட், மதுசாரம் உட்பட ஏனைய போதைப்பொருட்கள் தொடர்பாக ஏதேனும் செய்திகள் வெளிவரும்போது அது யாரால் வெளியிடப்படுகிறது, எதற்காக அவ்வாறானதொரு செய்தி வெளியிடப்பட்டது, செய்தி வெளியாகிய காலம் என்பது பற்றி தர்க்க ரீதியாக பார்க்க வேண்டும். மேலும் குறிப்பிட்ட விடயம் சமூகத்தில் பரவுவதால் இது எவ்வகையான தாக்கத்தை சமூகத்திற்கு ஏற்படுத்தும் என்பதையும் கருத்திற்கொண்டு இதனை சமூகமயப்படுத்த வேண்டும்,

சமூகத்திலுள்ள கருத்தியலாளர்கள், ஊடகவியலாளர்கள், ஆசிரியர்கள், இளைஞர்கள் என அனைத்து கட்டமைப்புகளையும் இணைத்து சமூக ஆர்வலர்கள் செயற்பட வேண்டும் என மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் வடபகுதி இணைப்பாளர் ஆ.கோடீஸ்வரன் தெரிவித்ததுடன், இவ்விடயங்களை நடைமுறைப்படுத்துவது எங்கள் அனைவரினதும் பொறுப்பாகும் - என்றார்.

போதைப்பொருள் விளம்பரங்கள் சமூக வலைத்தளங்கள் ஊடாக விளம்பரப்படுத்தப் படுகின்றது என தெரிவித்த மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம், நிகழ்ச்சித் திட்ட அதிகாரி நிதர்சனா செல்லத்துரை, குறிப்பாக மாணவர்கள் இணையவழி கற்றலை ஆரம்பித்ததன் பின் இணையவழி ஊடாக போதைப்பொருள் விளம்பரப்படுத்தப்படுகின்றது - என்றார்.

கடந்த 8 மாதங்களில் வெளிவந்த 14 திரைப் படங்களில் 13 திரைப்படங்கள் போதைப் பொருள் தொடர்பான விளம்பரமாக காணப்படுகின்றது. போதைப்பொருளை ஊக்குவிப்பது தொடர்பாக சமூக வலைத்தளத்தில் 900 படங்கள் பகிரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இது மதுசார புகையிலை சட்டத்தை மீறும் விடயம் - என்றார்.

# வவுனியா பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்கள் அடையாள வேலைநிறுத்தம்



(வவுனியா திவியா)

இலங்கை பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நேற்று நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களிலும் உள்ள கல்விசார் ஊழியர்கள் அடையாள பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

அந்தவகையில் வவுனியா பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த கல்விசார் ஊழியர்களும் அதற்கு ஆதரவாக அடையாள பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

அநீதியான அரசாங்கத்தின் அசாதாரணமான வரி விதிப்புக் கொள்கை மற்றும் மக்களை அழுத்தத்திற்குள்ளாக்கும் வரவு-செலவுத் திட்டத்தை எதிர்ப்போம் என்ற தொனிப் பொருளை முன்வைத்தே இந்த பணிப்பகிஷ்கரிப்பு இடம் பெற்றுள்ளது.

இதன் காரணமாக வவுனியா பல்கலைக் கழகத்தில் எந்தவிதமான கல்வி நடவடிக்கைகளும் இடம்பெறாது - என வவுனியா பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் எஸ்.திருஞான சம்பந்தர் தெரிவித்தார்.

# ஆறுமுகநாவலர் 200ஆவது ஜனன தினம் வவுனியாவில்





(வவுனியா நிருபர்)

வவுனியா பூந்தோட்டம் ஆறுமுக நாவலர் வீதியில் காணாமலாக்கப் பட்டவர்களின் உறவுகளினால் அமைக் கப்பட்டுள்ள ஞாபகார்த்த நினைவுத் தூபியில் நேற்று (14) காலை 9.30 மணியளவில் ஆறுமுகநாவலரின் ஜனன தினம் காணாமலாக்கப் பட்டவர்களின் உறவுகள் மற்றும் தமிழ் விருட்சம் அமைப்பினரினால் நினைவு கூரப்பட்டது.

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளால் வழங்கப்பட்ட நிதிப்பங்களிப்பில் அமைக்கப்பட்டுள்ள ஆறுமுகநாவலரின் நினைவுத் தூபியில் தமிழ்மணி அகளங்கனின் சொற்பொழிவுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் பொது அமைப்பு களின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள், காணாமலாக்கப் பட்டவர்களின் உறவுகள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

நிகழ்வில் காணாமலாக்கப் பட்டவர்களின் உறவுகளுக்கு புத்தாடைகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள் என்பன தமிழ் விருட்சம் அமைப்பால் வழங்கப்பட்டதுடன் ஊடகவியலாளர் குமுதனின் தாயாரின் நினைவாக மரக்கன்றும் வழங்கப்பட்டது.

### அறிவித்தல்

297, வைத்தியசாலைவீதி, அங்கொட என்ற முகவரியில் அமைந்துள்ள MP பள்ளிய குருகே அடகு நிலையம் 2022–12–16 முதல் 41/B, கொலன்னாவ வீதி, கொத்தட்டுவ நவநகரய என்ற முகவரியில் அமைந்துள்ள எமது தலைமை அலுவலகத் துடன் இணைக்கப்பவுள்ளது.

# கிராஞ்சி பகுதி மக்களுக்கு ஆதரவாக யாழில் போராட்டத்திற்கு அழைப்பு




(யாழ். நிருபர்)

கிளிநொச்சி மாவட்ட கிராஞ்சி பகுதி மக்களின் கடலட்டைப் பண்ணைகளுக்கு எதிரான போராட் டத்திற்கு ஆதரவாக தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நாளை 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் முன்பாக போராட்டமொன்று இடம்பெற வுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் முன்பாக காலை 10 மணிக்கு ஆரம்பிக்கும் போராட்டம் வடமாகாண ஆளுநர் செயலகத்தில் நிறைவடையவுள்ளது.

போராட்ட நிறைவில் வடமாகாண ஆளுநர் செயலகம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, கடற்றொழில் அமைச்சர் ஆகியோருக்கு மகஜர் கையளிக் கப்படவுள்ளது.

போராட்டத்திற்கான அழைப்பை தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் பிரதிநிதிகள் யாழ். ஊடக அமையத்தில் நேற்று புதன்கிழமை (14) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் விடுத்தனர்.

கிராஞ்சி பகுதி மீனவர்களின் போராட்டத்தை உரிய தரப்பினர் கண்டுகொள்வதாக இல்லை. மக்களின் விருப்புக்கு மாறாக கடலட்டைப் பண்ணைகளை அமைக்க முடியாது. கடலட்டைப் பண்ணையை முன்னுரிமைப்படுத்தி அரசாங்கம் செயற்படுகிறது.இதில் பல்தேசிய கம்பனிகளே நன்மை பெறுகின்றன என தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ஆ.சதீஸ்வரன் தெரிவித்தார்.

வடமாகாணத்திலுள்ள அனைத்து சிவில் சமூகத்தினரும் அரசியல் தரப்புகளும் பங்கேற்று போராட்டத்திற்கு ஆதரவளித்து பங்கேற்கவேண்டுமென இ.முரளிதரன் அழைப்பு விடுத்தார்.

சிறிய மீனவர்கள் பழிவாங்கப்படுகின்றனர். இந்நிலை தொடர்ந்தால் பாரிய நெருக்கடி நிலை ஏற்படுமென தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் பெனடிக் குரூஸ் தெரிவித்தார்.

அரசாங்கம் தனது இலாபங்களுக்காக கடலட்டை பண்ணையை உருவாக்குகிறது. இதற்காக கடலட்டைப் பண்ணைக்கு ஆதரவான கருத்தை நக்டா வெளியிடுகிறது. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் எமது பகுதி வளங்கள் சுரண்டப்படுகின்றன. எங்கள் வளங்களை சுரண்டிவிட்டு அரசியல் தீர்வு தந்து பயனில்லை என தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் இன்பம் கருத்து தெரிவித்தார்.

கிராஞ்சி இலவன்குடாவில் சட்டவிரோத கடலட்டைப் பண்ணைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து 76 நாட்கள் போராட்டம் இடம்பெற்று வருவதாகவும் அரசியல் தரப்புகள் கண்டுகொள்வதில்லை ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக் கப்பட்டது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 14.12.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 133 2067 | 144 6524 |
| கனேடியன் டொலர் | 152 6 25 | 164 8036 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 4 7427 | 43 83 |
| யூரோ | 270 0375 | 285 7330 |
| ஜப்பான் யென் | 1 5325 | 1 6431 |
| சிங்கப்பூர் டொலர் | 154 4325 | 165 8602 |
| ஸ்ரேலிங் பவுன் | 332 2620 | 35 4330 |
| சுவிஸ் பிரான்ங் | 272 6308 | 3 1 8408 |
| ஐ.அ.டொலர் | 250 0862 | 260 6080 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 852 1672 |
| குவைட் | குவைட் தினார் | 0,074 5118 |
| ஓமான் | ஓமான் றியால் | 832 1768 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 7753 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 5 6 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 7645 |

திகதி 13.12.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4968
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.27,932,504.00
ஆங்கில எழுத்து S வெற்றி இலக்கங்கள் 8 3 5 6 9 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3210
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,758,820.00
ஆங்கில எழுத்து I வெற்றி இலக்கங்கள் 09 17 23 25
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,312,984.40

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1423
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,291,720.00
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள் 5 0 9 5 9 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.11,997,275.60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 998
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,899,380.00
M 40 50 73 81
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 136,646,883.20

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 277
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,742,000.00
இலக்கினம் மிதுனம் வெற்றி இலக்கங்கள் 14 16 37 62
விசேட இலக்கினம் மிதுனம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,669,474.40

கோடி 28+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1316
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,340,480.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.286,276,842.00
T 05 14 17 24 47
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவதரித்து 200 ஆண்டுகள் நிறைவு மாநாடு யாழில்









(யாழ். நிருபர்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவதரித்து 200 ஆண்டு நிறைவு மாநாடு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டிலும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, யாழ். மாநகர சபை சமய விவகாரக் குழு ஆகியவற்றின் இணை ஏற்பாட்டிலும் யாழ்ப்பாணம் நல்லூரில் ஆரம்பமானது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் ஆன்மிக அரங்கின் தொடக்க நிகழ்வுகள் நேற்று (14) காலை 7.30 மணிக்கு குருபூஜை நிகழ்வுகளோடு ஆரம்பமாகின.

அதனைத் தொடர்ந்து நாவலர் பெருமானின் வரலாற்றைச் சித்திரிக்கின்ற ஓவியங்களும் நாவலர் பெருமானால் சமூகத்திற்குத் தரப்பட்ட படைப்புகளும் உள்ளடங்கிய கண்காட்சி நிகழ்வின் அங்குரார்ப்பண வைபவமும் இடம்பெற்றது.

காலை 8 மணிக்கு நாவலர் பெருமானின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்வலம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்திலிருந்து நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபம் நோக்கிப் பவனிவந்தது.

நாவலர் கலாசார மண்டபத்தில் பெயர்ப்பலகைத் திரைநீக்கத்தைத் தொடர்ந்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானுக்கான குருபூஜை நிகழ்வுகளோடு ஆன்மிக அரங்கின் அரங்க நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், சர்வதேச இந்துகுருமார் ஒன்றியத் தலைவர் து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய.அநிருத்தனன், யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன், சமயப் பெரியார்கள், கல்விமான்கள், அறநெறி பாடசாலை சமூகத்தினர், பல்கலைக்கழக சமூகத்தினர் எனப் பலரும் பங்கெடுத்தனர்.

நாவலர் பெருமானின் குருபூஜை நாளான டிசம்பர் 14ஆம் திகதி நிகழ்வுகள் ஆரம்பமாகி 15, 16, 17ஆம் திகதிகளில் தொடர்ச்சியாக இடம்பெற்று நாவலர்பெருமானின் ஜனன தின நாளான டிசம்பர் 18ஆம் திகதி மாநாடு நிறைவடையவுள்ளது.

இம்மாநாட்டு நிகழ்வுகள் நல்லூரிலே நாவலர் மணிமண்டபம், நாவலர் கலாசார மண்டபம், ஸ்ரீ துர்க்கா மணிமண்டபம், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபம் ஆகிய இடங்களில் ஆன்மிக அரங்கு, பொது அரங்கு, ஆய்வரங்கு என்பன இடம்பெறவுள்ளன.

# பதக்கங்களை வென்ற யாழ். சிறைச்சாலை உத்தியோகத்தருக்கு வரவேற்பு




(யாழ். நிருபர்)




வென்னப்புவ எஸ்.பீரிஸ் உள்ளக விளையாட்டரங்கில் டிசம்பர் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மெய்ஜி கிண்ண (MEIJI CUP - 2022) இலங்கை ஓபன் கராத்தே சம்பியன்ஷிப் போட்டி -2022 இல் இலங்கை சிறைச்சாலைகள் அணி வெற்றிபெற்றது. இதில் தங்கப்பதக்கத்தைப் பெற்ற சிறைச்சாலைகள் கராத்தே அணி வீரருக்கு யாழ்ப்பாண சிறைச்சாலையில் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

குறித்த கராத்தே சுற்றுப் போட்டியில் பல்வேறு திணைக்கள கராத்தே அணிகள் பங்குபற்றியிருந்த நிலையில், நாடுபூராகவும் சிறைச்சாலைகளில் தெரிவுசெய்யப்பட்ட சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் அதில் பங்குபற்றியிருந்தனர்.

யாழ்ப்பாண சிறைச்சாலையில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் குறித்த போட்டியில் பங்குபற்றியிருந்த நிலையில், சிறைச்சாலை கராத்தே அணி - 2022 போட்டியில் வெற்றிபெற்று தங்கப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டது.

கராத்தே போட்டியில் வெற்றிபெற்று ஒரு தங்கப் பதக்கத்தையும் ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் பெற்ற யாழ்ப்பாண சிறைச்சாலை உத்தியோகத்தர் ரி. பிரசாத்துக்கு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய வாழ்த்துகளை தெரிவித்தார்.

வெற்றியீட்டிய வீரருக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு பொன்னாடை போர்த்தி வரவேற்பளிக்கப்பட்டது.

யாழ்ப்பாண சிறைச்சாலை வளாகத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் யாழ்ப்பாண சிறைச்சாலையின் அத்தியட்சகர், யாழ்ப்பாண சிறைச்சாலையின் பிரதம பொறுப்பதிகாரி மற்றும் யாழ்ப்பாண சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

# கடலட்டைப் பண்ணைகளால் பாதிப்பில்லை

## பண்ணையாளர்கள் தெரிவிப்பு



(யாழ். நிருபர்)

கடலட்டைப் பண்ணைகளால் மீன் வளங்களுக்கோ கடல் வளங்களுக்கோ எந்தவிதமான பாதிப்புகளும் இல்லை. கடலட்டைப் பண்ணைகள் தொடர்பில் விஷமத்தனமான பிரசாரங்களை மக்கள் மத்தியில் தெரிவித்து, கடற்றொழிலாளர்களின் பொருளாதார மீட்சியை சிலர் திட்டமிட்டு குழப்புகின்றார்கள் - என யாழ்ப்பாணத்தில் கடலட்டைப் பண்ணைகளை நிறுவியுள்ள சிலர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் கடற் பிரதேசங்களுக்கு ஊடகவியலாளர்களை நேற்று முன்தினம் (13) நேரடியாக அழைத்துச் சென்று, கடலட்டைப் பண்ணைகளின் அமைப்பு தொடர்பாக அட்டைப் பண்ணைகளை அமைத்துள்ள கடற்றொழிலாளர்களினால் காண்பிக்கப்பட்டது.

அதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது,

கடற்றொழிலாளர்களின் வாழ்வில் ஏற்படுத்தப்பட்டு வருகின்ற பொருளாதார மீட்சியை குழப்புகின்ற வகையில் கடலட்டைப் பண்ணை தொடர்பாக வெளியாகி வருகின்ற கருத்துகள் எமக்கு வேதனை தருகின்றன.

கடலட்டைப் பண்ணைகள் அனைத்து நடைமுறைகளையும் பின்பற்றியே அமைக்கப்பட்டு வருகின்றன. எனினும், சில கடலட்டைப் பண்ணைகளுக்கான அனுமதிப்பத்திர ஆவணங்கள் இதுவரை கிடைக்கவில்லை. அதற்காக அவற்றை சட்டவிரோத பண்ணைகளாக கருத முடியாது.

சாதாரணமாக பண்ணைகளுக்கான அனுமதி ஆவண ரீதியாக (பேப்பர் வேர்க்) நிறைவுசெய்து கடலட்டைப் பண்ணையை அமைப்பதற்கு குறைந்தது 3 மாதங்கள் தேவைப்படும்.

மக்கள் எதிர்கொள்கின்ற பொருளாதார நெருக்கடிகளை கருத்திலெடுத்து, ஆவண ரீதியான அனுமதியைப் பெறுவதற்கான காலதாமதத்தைத் தவிர்க்கும் வகையில், தழுவல் அடிப்படையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. எனினும், குறித்த தழுவல் அனுமதிகள் அமைச்சரினால் தான்தோன்றித்தனமாக வழங்கப்படுவதில்லை.

கடற்றொழில் திணைக்களம், நாரா, நக்டா, சம்பந்தப்பட்ட பிரதேச செயலகம் உட்பட்ட சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் பரீட்சித்து, நீர் வாழ் உயிரினங்களுக்கோ அல்லது சூழலுக்கோ எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது என்பதை உறுதிபடுத்திய பின்னர், சம்பந்தப்பட்ட பிரதேசத்தைச் சேர்ந்த கடற்றொழில் சங்கங்களுடன் புரிந்துணர்வை ஏற்படுத்திய பின்னரே, பண்ணைகள் அமைப்பதற்கு அனுமதிகள் அளிக்கப்படுகின்றன.

அதேவேளை, சிலரால் எந்தத் திணைக்களங்களுடனும் தொடர்புகொள்ளாமல் தான்தோன்றித்தனமாக சில பண்ணைகள் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ளதாக நாங்களும் அறிகின்றோம். அவை அகற்றப்பட வேண்டும் என்பதில் எமக்கு மாற்றுக்கருத்து இல்லை. இதனை கடற்றொழில் அமைச்சரும் வலியுறுத்தி இருப்பதை செய்திகளில் அவதானித்திருக்கின்றோம்.

ஆகவே, மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் முகமாக ஒருசிலர் செயல்படுவது கவலையளிக்கின்ற நிலையில் சட்டவிரோத பண்ணைகள் இருக்கிறதெனக் கூறுபவர்கள் அதனை இனங்காட்டுங்கள் அகற்றுகிறோம்.

மேலும் சிலர், கடல் மாசடையும், மீன் வளம் பெருகாது போன்ற கருத்துகளை ஊடகங்களுக்கு தெரிவிக்கின்றனர்.

ஆழம் குறைந்த சூடான கடல் நீர் உள்ள பகுதியிலேயே அட்டை வளர்ப்பு இடம்பெறுகிறது. சூடான நீரில் மீன்கள் இனப்பெருக்கம் செய்வதோ அல்லது முட்டையிடுவதோ மிகவும் சாத்தியம் குறைவு.

இதைப் பற்றி பேசுபவர்களுக்கு அனைத்து விடயங்களும் தெரிந்தும் மக்களை குழப்பும் வகையில், தவறான குறுகிய நோக்கங்களுக்காக முரண்பாடான கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர் எனவும் கடலட்டைப் பண்ணையாளர்கள் மேலும் தெரிவித்தனர்.

# இராகலை டெல்மார் மேல்பிரிவு தோட்ட மக்கள் நிர்வாகத்துக்கு எதிராக பணிப்பகிஷ்கரிப்பு




(இராகலை நிருபர்)

மத்துரட்ட பெருந்தோட்ட யாக்கம் பிரவுன்ஸ் கம்பனி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் இராகலை டெல்மார் மேல்பிரிவு தோட்ட மக்கள் நேற்று (14) காலை அடையாள பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

தோட்ட நிர்வாகம் டெல்மார் மேல்பிரிவு தோட்டத்திற்குரிய தேயிலை காணிகளில் 'டேப்பன்டைல்' மரக்கன்றுகளை நடுவதற்கு எடுத்த முயற்சியை கண்டித்தும், அத் தோட்ட தொழிலாளர்களுக்கு சலுகைகள் மறுக்கப்படுவதை எதிர்த்தும் சுமார் 280 பதிவுசெய்யப்பட்ட தொழிலாளர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

டெல்மார் தோட்டத்தை பிரவுஸ் கம்பனி நிர்வாகம் பொறுப்பேற்றதன் பின்னர் பல ஹெக்டேயர் தேயிலை காணிகளில் தேயிலை மரங்களுக்கு இடையிலும், ஓரங்களிலும் டேப்பன்டைல் மரக் கன்றுகளை நிர்வாகம் நாட்டி வருகிறது. இந்த நிலையில் எதிர்காலத்தில் தேயிலைக்கு பாரிய பாதிப்பு ஏற்படுமென சுட்டிக்காட்டும் தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகம் டேப்பன்டைல் மரங்கள் ஊடாக பாரிய இலாபத்தை அடைய திட்டமிட்டு தேயிலையை அழிக்க திட்டமிடுகிறது எனவும் தெரிவிக்கின்றனர். மேலும் தேயிலை நிலங்களில் டேப்பன்டைல் மரக்கன்றுகளை நடுவதால் தேயிலைக்கு நீர் பற்றாக்குறை ஏற்பட்டு பின் தேயிலை விளைச்சல் குறைந்து விடும்.

இதனால் தொழிலாளர்கள் தொழிலை இழக்க நேரிடுவதுடன், தேயிலை மலைகளும் காடாகும் எனவும் தெரிவிக்கின்றனர்.

அதேநேரத்தில், இத்தோட்டத்தில் ஏற்கனவே சில தேயிலை மலைகளின் ஓரங்களில் டேப்பன்டைல் மரக்கன்றுகள் நாட்டப்பட்டுள்ளன. அதற்கும் தொழிலாளர்கள் எதிர்ப்பு தெரிவித்ததை தொடர்ந்து மரக்கன்று நடும் செயற்பாடு கைவிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் உடப்புஸ்ஸலாவை எனிக் தோட்டத்தில் வளர்த்தெடுக்கப்படும் டேப்பன்டைல் மரக்கன்றுகளை டெல்மார் தோட்ட நிர்வாகம் மீண்டும் கொண்டு வந்து அதை நடுவதற்கு தொழிலாளர்களை பணித்தது.


ஆனால், தோட்ட நிர்வாகத்தின் பணிப்பினை நிராகரித்து கொண்டுவரப்பட்ட மரக்கன்றுகளை மீண்டும் தோட்டத்தைவிட்டு வெளியில் எடுத்து செல்லும்படி வலியுறுத்தி பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதாக தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், டெல்மார் மேல்பிரிவு தோட்டத்தில் சுமார் 67 பேருக்கு வீட்டு வசதி இல்லை, இவர்களுக்கு வீடுகட்ட தோட்ட நிர்வாகம் நிலம் வழங்காது தோட்டத்தை காசாக்கி இலாபம் பெற மரக்கன்றுகளை நடுவதற்கு நாம் இடமளிக்கப் போவதில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேநேரத்தில், தோட்ட நிர்வாகம் நடுவதற்கு கொண்டு வந்துள்ள மரக்கன்றுகளை தோட்டத்திலிருந்து அப்புறப்படுத்தி வழமையான தொழிலுக்கு செல்வோம் என தெரிவிக்கும் பெண் தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகம் உரிய தீர்வை வழங்க முன்வராத பட்சத்தில் தொழிற்சங்க நடவடிக்கையில் குதிக்கவும் தயார் எனவும் தெரிவித்துள்ளனர்.

# ரணிலை ஜனாதிபதியாக மக்கள் ஏற்கவில்லை

## நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன்




(எஸ்.கணேசன்)

அனைத்து அதிகாரங்களும் தற்போது இருந்தாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தர்மத்தின் பக்கம் நிற்கவில்லை. அவர் ஏதேச்சதிகாரமாக செயற்பட்டுவருகின்றார். அவரை உத்தியோகபூர்வ ஜனாதிபதியாக நாட்டு மக்கள் ஏற்கவில்லை - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான வி.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

மலையக தொழிலாளர் முன்னணியின் நிதிச் செயலாளரும் கொட்டகலை ஐக்கிய வர்த்தக சங்கத்தின் தலைவருமான விஷ்வநாதன் புஷ்பா தலைமையில் கொட்டகலையில் இடம்பெற்ற மலையக மக்கள் முன்னணியின் மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது வரிசை யுகம் முடிந்துவிட்டது எனவும் இயல்பு நிலை திரும்பிவிட்டது எனவும் சிலர் கூறுகின்றனர். உண்மை அதுவல்ல. பொருட்களின் விலைகள் எகிறிவிட்டன. மக்களின் கொள்வனவு சக்தி குறைந்துவிட்டது. அதேபோல எரிபொருள் உள்ளிட்டவை மட்டுப்படுத்தப்பட்ட அளவில்தான் வழங்கப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சட்டக் கல்லூரிக்கு சென்றிருந்தவேளை, அவருக்கு எதிராக கூக்குரல் எழுப்பப்பட்டுள்ளது. இந் நாட்டு மக்கள் அவரை உத்தியோகபூர்வ ஜனாதிபதியாக ஏற்கவில்லை என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது. 134 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் அவர் தெரிவாகியிருந்தாலும், மக்கள் ஆணை தனக்கு இல்லை என்பதை அவர் புரிந்துகொள்ள வேண்டும். என்னதான் அதிகாரம் இருந்தாலும் தர்மத்தின் பக்கம் நிற்பதே சரியான தீர்மானம். ஆனால், ஜனாதிபதி ஏதேச்சதிகாரமாக செயற்பட்டு மக்களை ஒடுக்க முற்படுகின்றார்- என்றார்.

# நுவரெலியாவில் மலர் விற்பனைக் கண்காட்சி




(தலவாக்கலை நிருபர்)

நுவரெலியா மாவட்டத்தில் மலர் வளர்ப்பாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் மலர் விற்பனை கண்காட்சியொன்று நுவரெலியா விக்டோரியா கோல்ஃப் மைதானத்திற்கு அருகாமையில் இடம்பெற்றது.

நுவரெலியா மேயர் சந்தனலால் கருணாரத்ன தலைமையில் இந்த மூன்று நாள் மலர் விற்பனை கண்காட்சி ஆரம்பிக்கப்பட்டதுடன், மத்திய மாகாண பிராந்திய பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் மற்றும் தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம் இணைந்து இந்த மலர் விற்பனை கண்காட்சியை ஏற்பாடு செய்திருந்தன.

பொருளாதார அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஷிலோமி கிருஷ்ணராஜா, நுவரெலியா மாநகர ஆணையாளர் மற்றும் மேலதிக மாவட்டச் செயலாளர் எஸ்.பி.கே.போதிமன்ன, ஹக்கல பூங்காவின் உதவிப் பணிப்பாளர் நிஷாந்தி ஹலுவான, பிராந்திய பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் உதவிப் பணிப்பாளர் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# முச்சக்கரவண்டி – மோட்டார்சைக்கிள் நேருக்கு நேர் மோதியதில் விபத்து

## இருவர் நுவரெலியா வைத்தியசாலையில்

(செ.திவாகரன்)

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுவரெலியா - பதுளை வீதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்தனர். முச்சக்கரவண்டி ஒன்றும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியது.

குறித்த விபத்து நேற்று முன்தினம் (13) இரவு இடம்பெற்றுள்ளதாகவும் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயங்களுடனும், முச்சக்கரவண்டி சாரதிக்கு சிறிய காயங்களுடனும் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து பற்றி மேலும் தெரியவருவதாவது, நுவரெலியாவிலிருந்து மார்கஸ் தோட்டத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கரவண்டி மீது பதுளை வீதியினூடாக பயணித்து வந்த மோட்டார் சைக்கிள் மோதுண்டதனாலேயே மேற்படி விபத்தானது சம்பவித்துள்ளது.

மோட்டார் சைக்கிள் மிக வேகமாக பயணித்ததாகவும், இதனால் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி, முச்சக்கரவண்டி மீது மோதி விபத்துக்குள்ளானதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் நுவரெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# தலவாக்கலை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் சுமண இடைநிலைப் பாடசாலையில் மர நடுகை




(தலவாக்கலை நிருபர்)



தலவாக்கலை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் தலவாக்கலை சுமண இடைநிலைப் பாடசாலை வளாகத்தில் மரக்கன்றுகள் நாட்டப்பட்டன.

இதன்போது மா, கொய்யா, மாதுளை, தேசிக்காய் போன்ற 200 வகையான பெறுமதிமிக்க கன்றுகள் நாட்டப்பட்டன.

இந்நிகழ்வில் மத்திய மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சஞ்சீவ தர்மரத்ன, நுவரெலியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்தி யு.உடுகமசூரிய, நுவரெலியா உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜயசுந்தர, தலவாக்கலை பொலிஸ் நிலையப் பிரதான பரிசோதகர் எம்.சமந்த பெரேரா, தலவாக்கலை சுமண இடைநிலைப் பாடசாலையின் அதிபர் பிரான்சிஸ் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# தமிழருக்கு குரல் கொடுத்த யஸ்மின் சூக்காவுக்கு எதிராக போலித் தகவல்

## லண்டன் நீதிமன்றத்தில் மன்னிப்புக் கோரிய கோட்டா ஆதரவாளர்




தென்னாபிரிக்க மனித உரிமைகள் சட்டத்தரணியும் செயற்பாட்டாளருமான யஸ்மின் சூக்காவுக்கு எதிராக பொய்யான அறிக்கைகளை வழங்கியதற்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஐக்கிய இராச்சியத்தின் செயற்பாட்டாளர் ஜெயராஜ் பலிஹவடன நீதிமன்றத்தில் நிபந்தனையின்றி மன்னிப்புக் கோரியுள்ளார்.

சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டத்தின் செய்தியின்படி ஜெயராஜ் பலிஹவடன இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசியல் கட்சியின் பிரித்தானிய பிரதிநிதியாக அண்மைக்காலம் வரை பணியாற்றினார்.

தென்னாபிரிக்க மனித உரிமைகள் வழக்கறிஞரும் ஆர்வலருமான யஸ்மின் சூக்கா, தனது நற்பெயருக்கு தீங்கு விளைவிக்கும் தவறான தனிப்பட்ட தகவல்கள் அடங்கிய அறிக்கையை வெளியிட்ட ஜெயராஜ் பலிஹவடனவுக்கு எதிராக தரவு பாதுகாப்புச் சட்டம் 2018இன் கீழ் இங்கிலாந்தில் தரவு பாதுகாப்பு உரிமை கோரலைத் தொடங்கினார் என்று சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டம் தெரிவித்துள்ளது.

ஜெயராஜ் பலிஹவடன 2021ஆம் ஆண்டு ஜெனீவாவிலுள்ள 47 தூதரக அதிகாரிகளுக்கு அனுப்பியதாக ஒரு அறிக்கையை வெளியிட்டார். சூக்கா தடைசெய்யப்பட்ட பயங்கரவாதக் குழுவுக்கு ஆதரவாகச் செயல்படுகிறார் என்று அதில் பொய்யாக அவர் கூறினார் என சூக்கா குற்றஞ்சாட்டினார்.

இறுதியில் பலிஹவடன, சூக்காவுக்கு கணிசமான சட்டச் செலவுகள் மற்றும் இழப்பீடுகளை வழங்க ஒப்புக்கொண்டது மட்டுமல்லாமல், அவரது கருத்துகளை திரும்பப் பெறவும், ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் ஒன்லைனில் மன்னிப்புக் கோரவும் ஒப்புக் கொண்டதாக சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டம் கூறியது. கூடுதலாக, பிரதிவாதியாக பலிஹவடன திறந்த நீதிமன்றத்தில் ஓர் அறிக்கையை வெளியிட ஒப்புக்கொண்டதுடன், அவரது வலைத்தளத்தில் மன்னிப்புக் கோரினார்.

# சங்கானை பிரதேச செயலகத்தில் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு



சங்கானை பிரதேச செயலகத்திற்குட்பட்ட தொழில்வாய்ப்பற்ற இளைஞர், யுவதிகளுக்கான மாபெரும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் (13) சங்கானை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாண செயற்பாட்டு மையம் மற்றும் மனிதவள வேலைவாய்ப்பு திணைக்களம் ஆகியன இணைந்து இந்த மாபெரும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தன.

இந்தக் கருத்தரங்கின் வளவாளர்களாக திருமதி சசிதரன் குவேதினி (மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம் - சங்கானை) கே.கருணாகரன் (மாவட்ட ஒருங்கிணைப்பாளர் - யாழ். மாவட்ட செயலகம்) ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

தொழில் வாய்ப்புக்குத் தேவையான உள ஆற்றலை மேம்படுத்துவது எவ்வாறு, நேர்முகப் பரீட்சையை எதிர்கொள்வது எவ்வாறு, தொழில்வாய்ப்பில் இணைவது எவ்வாறு போன்ற விடயங்கள் தொடர்பாக இளைஞர், யுவதிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நிகழ்வின் அனுசரணையாளர்கள், யாழ். மாவட்ட செயலகத்தினர், சங்கானை பிரதேச செயலகத்தினர், இளைஞர்கள் மற்றும் யுவதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# பிலிப்பைன்ஸுக்கான இலங்கைத் தூதுவர் வெளிவிவகாரச் செயலாளரை சந்திப்பு




பிலிப்பைன்ஸுக்கான இலங்கைத் தூதுவர் ஷோபினி குணசேகர, பிலிப்பைன்ஸின் வெளிவிவகாரச் செயலாளர் (அமைச்சர்) என்ரிக் ஏ.மனலோவை தனது பணியின் நிறைவில் சந்தித்து விடைபெற்றார்.

தூதுவர் குணசேகரவின் பதவிக்காலத்தில் பிலிப்பைன்ஸ் - இலங்கை உறவுகளை வலுப்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டமைக்காக செயலாளர் மனலோ தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

தூதரகத்திற்கு வழங்கப்பட்ட ஆதரவுக்காக தூதுவர் குணசேகர பிலிப்பைன்ஸின் வெளிவிவகாரத் திணைக்களத்திற்கு நன்றிகளைத் தெரிவித்ததுடன், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் எதிர்வரும் ஆண்டுகளில் மேலும் முன்னேற்றமடையும் எனத் தெரிவித்தார்.

# இந்திய நாடாளுமன்றத்தின் வெளிவிவகாரக் குழுவின் தலைவருடன் மொரகொட பேச்சு



இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, இந்திய நாடாளுமன்றத்தின் வெளிவிவகாரக் குழுவின் தலைவர் ஸ்ரீ பி.பி. சௌத்ரியை டிசம்பர் 13ஆம் திகதி புதுடில்லியில் சந்தித்து, இலங்கையும் இந்தியாவும் நாடாளுமன்ற மட்டத்தில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்து ஆராய்ந்தார்.

உயர்ஸ்தானிகர் மற்றும் வெளிவிவகாரக் குழுவின் தலைவருக்கு இடையிலான சந்திப்பு அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் சுமூகமான முறையில் இடம்பெற்றதுடன், குழுக்கள் மற்றும் நட்புக் குழுக்களின் பரிமாற்றங்கள் மூலம் இரு நாடாளுமன்றங்களுக்குமிடையிலான தொடர்புகளை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

தலைவருடனான உயர்ஸ்தானிகர் மொரகொடவின் சந்திப்பு, நாடாளுமன்ற மட்டத்தில் ஒத்துழைப்பை மேம்படுத்துதல் - நாடாளுமன்ற இராஜதந்திரத்தை மேம்படுத்துதல் கொள்கையானது, உயர்ஸ்தானிகராலயத்தின் இந்தியாவிலுள்ள இலங்கை இராஜதந்திரத் தூதரகங்களுக்கான ஒருங்கிணைந்த நாட்டு மூலோபாயம் 2021/2023 கொள்கை வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. உயர்ஸ்தானிகர் ஒருங்கிணைந்த நாட்டு மூலோபாயத்தின் பிரதியொன்றையும் வெளிவிவகாரக் குழுவின் தலைவரிடம் கையளித்தார்.




## Sales Manager

A well reputed company in the construction sector.
Key Responsibilities
- Meeting the sales target of the organization
- Selling product and services to customers
- Performing cost- benefit analysis of potential and existing customers
- Map potential customers and generate leads and opportunities for the organization
- Set KPIs for the sales team
- Analyze territory and market potential, track sales and status report
- Supply management and with reports on customer needs, problems and interest
- Expedite resolutions for customer problems and maintain client centricity

Candidate Profile
- 10- 15 years' experience in sales and management role in building materials
- Proven track record of meeting sales targets and leading teams
- Good contact base with people in the construction industry
- Excellent interpersonal skills and communication skills in English and Sinhala/ Tamil
- Excellent co-ordination ability and decision-making skills

## Operations Manager

A start -up BPO company based in Sri Lanka.
Key Responsibilities
- Aid in recruitment and interviewing possible candidates
- Summarize and analyze call center trends and data for performance
- Manage and improve center performance
- Oversee system maintenance and upgrade implementation

Candidate Profile
- 2 years of BPO managerial experience
- 2 years call center experience
- Bachelor's degree
- Excellent communication skills in English, Sinhala / Tamil

Salary negotiable, working hours will differ based on the client requirement. sd drsd candidates can apply by sending their CVs to db t hd dmsabnmmdbsdc f l lkbnl
Contact us on +94 776 371 134 | +94 777328 123.
BConnected (Pvt) Ltd.
No: 07, Skelton Gardens,
Colombo 05.

## CAD Draftsman / 3D Designer

Company: MN Homes Developer Pvt. Ltd.,Rajagiriya.
5 Years Experience with MEP.
Contact: 0760959252, 0760959248,
hmenl mo nod s f l lkbnl
Flight crew – Captains and First Officers
sst sn Srilankan Airlines
Unfurl your flying wings and be a master of the skies, taking Srilankan Airlines to the future. Be the messenger that tells the world of the exotic adventures that await them in the Paradise Island of Sri Lanka and beyond.
We offer you a host of attractive benefits and a competitive monthly remuneration package.

## A320/330 Captains and First Officers

Captains and First Officers will be offered employment on Fixed Term Contracts.
hmhi t l t lkelb shnmr sn ook
Rated Captains on A320/A330 should have a minimum of 5500 Hours with 1000 P1 Hours on type.
Rated Captains on A320/A330 should have a minimum of 500 P2 Hours on type. Be a Sri Lankan citizen.
n mkn c sgd ooklb shnmen l enl sgd lkm adkn mc dl lk sgd bnl okdsdc en l sn olkns db t hd dms r lk m mbnl

# அகலவத்தை, கணபதி அறநெறி பாடசாலையின் 4ஆம் ஆண்டு பூர்த்தி விழா















அகலவத்தை, டார்டன்பீல்ட், கணபதி அறநெறிப் பாடசாலையின் 4ஆம் ஆண்டு பூர்த்திவிழா மிகவும் விமரிசையாக நடைபெற்றது. அகலவத்தை, டார்டன்பீல்ட், அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில், 4ஆம் ஆண்டு பூர்த்தியை சிறப்பிக்கும் முகமாக 'அகம்' எனும் ஆன்மீக சிறப்பு மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது. களுத்துறை மாவட்ட அறநெறிப் பாடசாலைகளின் வரலாற்றில் முதல் முறையாக ஒரு நூல் வெளியிடப்பட்டது இதுவே முதல் முறை. கணபதி அறநெறிப் பாடசாலையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சதாசிவம் உதயசாந்தனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சமூக தன்னார்வலர்கள், கலைஞர்கள், ஆன்மீகவாதிகள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பலருக்கு சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டு கௌரவம் அளிக்கப்பட்டது. அதிதிகளின் சிறப்புரை மற்றும் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் பெருந்திரளானோர் கலந்து சிறப்பித்திருந்தார்கள்.

(தகவல் - மணி ஸ்ரீகாந்தன்)

# வீடுகளை உடைத்து கொள்ளையிட்ட இருவர்

## அடையாளம் காண உதவுமாறு மட்டு. பொலிஸார் கோரிக்கை






(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 3 பொலிஸ் நிலையப் பிரிவுகளில் பல வீடுகளை உடைத்து கொள்ளையில் ஈடுபட்டுவந்துள்ள 2 கொள்ளையர்கள் சிசிரிவி கெமராவில் பதிவாகியுள்ளனர். எனவே, இவர்கள் தொடர்பாக அடையாளம் தெரிந்தவர்கள் மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் நிலையத்துக்கோ அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கோ அறிவிக்குமாறு மட்டு. தலைமையகப் பொலிஸார் பொதுமக்களின் உதவியைக் கோரியுள்ளனர்.

கடந்த ஒக்டோபர் 29ஆம் திகதி மட்டு. தலைமையக காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பூட்டியிருந்த 4 வீடுகளை ஒரு தினத்தில் 9 மணித்தியாலத்தில் உடைத்து அங்கிருந்து 28 பவுண் தங்க ஆபரணங்கள், 2 இலட்சத்து 83 ஆயிரம் ரூபா பணம், மடிகணினி, மணிக்கூடு போன்ற பெறுமதியான பொருட்களை கொள்ளையர்கள் கொள்ளையிட்டுள்ளனர்.

இந்த திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக அந்தப் பகுதிகளிலுள்ள சிசிரிவி கெமராவில் திருடர்கள் பதிவாகியுள்ளதுடன், அவர்களைத் தேடி பொலிஸாரால் விசாரணைகள் முடுக்கிவிடப் பட்டுள்ளதுடன், அவர்கள் தொடர்பாக அடையாளம் தெரிந்தவர்கள் உடனடியாக குறித்த பொலிஸ் நிலையங்களுக்கு அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் அறிவிக்குமாறு பொலிஸார் பொதுமக்களின் உதவியைக் கோரியுள்ளனர்.

# சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் போதைப்பொருள் பாவனையாளர்களுக்கு விடுத்துள்ள அறிவிப்பு



(பாறுக் ஷிஹான்)

போதைப்பொருள் பயன்படுத்துபவர்கள், விற்பவர்களின் வீடுகளில் நடைபெறும் திருமணம், ஜனாஸா கடமைகளுக்கு தமது ஒத்துழைப்பை வழங்கப்போவதில்லையென சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது. அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் பொறுப்பாளர் சபையின் 2022.12.01ஆம் திகதியன்று நடத்தப்பட்ட மாதாந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய இதனை எதிர்வரும் 2023ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிமுதல் நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. போதைப்பொருள் பயன்படுத்துபவர்கள், அதனை வியாபாரம் செய்பவர்களின் ஜனாஸாக்கள் தங்களின் மைய வாடியில் அடக்கம் செய்யப்பட மாட்டாது எனவும் பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

அவ்வாறானவர்களின் பெயர் விபரங்கள் விளம்பரப் பலகை மூலம் காட்சிப்படுத்தப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. போதைப் பொருளுடன் தொடர்புடையவர்களின் விபரங்களை உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்து, சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் புதிய காத்தான்குடி அல்-அக்ஸா பெரிய ஜும்மா பள்ளிவாசல் அறிவித்துள்ளது.


SAINTHAMARUTHU - MALIGAIKADU
BOARD OF TRUSTEES OF MOSQUES, MADHRASAS AND WAKF PROPERTIES
JUMMAH GRAND MOSQUE
MAIN STREET
SAINTHAMARUTHU
SRI LANKA.
General Secretary
Jummah Grand Mosque

# கந்தளாயில் தூக்கில் தொங்கியவாறு இளைஞர் ஒருவர் சடலமாக மீட்பு

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞர் ஒருவர் சடலமாக நேற்று (14) மீட்கப்பட்டுள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய், கோவில் கிராமம் பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய இளைஞரே இவ்வாறு தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டில் அம்மாவுடன் தனிமையில் வாழ்ந்துவந்த நிலையில் இவ்வாறு தூக்கில் தொங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் திடீர் மரண விசாரனை அதிகாரி பார்வையிட்டு பிரேத பரிசோதனைக்காக கந்தளாய் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# ஆலையடிவேம்பிலுள்ள 43 மதஸ்தலங்களுக்கு இலவசமாக சூரியமின்கல பிறப்பாக்கி வழங்கும் விண்ணப்பக் கடிதங்கள்

## பிரதேச செயலகத்தில் நேற்று வழங்கிவைப்பு





(ஆலையடிவேம்பு நிருபர்)

ஜனாதிபதி மற்றும் மின்சக்தி வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர, இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த ஹேரத் ஆகியோர்களுக்கிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பயனாக நாடளாவிய ரீதியிலுள்ள மதஸ்தலங்களுக்கும் முற்றிலும் இலவசமாக சூரியமின்கல பிறப்பாக்கிகள் வழங்கப்பட தீர்மானிக்கப்பட்டன.

இதற்கமைவாக ஒவ்வொரு மதஸ்தலங்களுக்கும் 5 கிலோ வோட் சக்தியுடைய சூரியமின்கல பிறப்பாக்கிகள் இலவசமாக வழங்கப்பட தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதற்கமைவாக ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 43 மதஸ்தலங்களுக்கான முற்றிலும் இலவசமான சூரியமின்கல பிறப்பாக்கி வழங்கும் விண்ணப்பக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று (14) இடம்பெற்றது.

குறித்த நிகழ்வு ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் வி.பபாகரன் தலைமையில் இடம்பெற்றது.

முன்னதாக நிகழ்விற்கு வருகை தந்த அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவருமான டபிள்யூ.டி.வீரசிங்கவை பிரதேச செயலாளர் உள்ளிட்டவர்கள் வரவேற்றனர்.

இதன் பின்னர் பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டத்தைத் தொடர்ந்து சூரியமின்கல பிறப்பாக்கி வழங்கும் விண்ணப்பக்கடிதங்கள் வழங்கப்பட்டன.

இக்கூட்டத்தில் உதவிப் பிரதேச செயலாளர் ஆர்.சுபாகர், கணக்காளர் க.பிரகஸ்பதி, பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஹுசைன்டீன், தலைமையக சமுர்த்தி முகாமையாளர் கிருபாகரன், கிராம உத்தியோகத் தர்களுக்கான நிர்வாக உத்தியோகத்தர் பரிமளவாணி, சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ரவிச்சந்திரன் உள்ளிட்ட அரச அதிகாரிகள் மற்றும் பிரதேச சபை உறுப்பினரும் அபிவிருத்திக் குழுத் தலைவரின் இணைப்பாளருமான கிந்துஜா, பிரதேச சபை உபதவிசாளர் விக்டர் ஜெகன், நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் இராஜாங்க அமைச்சின் இணைப்பாளர்கள், மதஸ்தலங்களின் தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.




# மாயமான மலேஷிய விமானம் திட்டமிட்டே மூழ்கடிக்கப்பட்டதா?

தென் சீனக் கடலில் 8 ஆண்டுகளுக்கு முன்னர் 239 பயணிகளுடன் மாயமான மலேஷிய விமானத்தை விமானி திட்டமிட்டே கடலில் மூழ்கடித்திருக்கலாமென வல்லுநர்கள் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

தலைநகர் கோலாலம்பூரிலிருந்து பீஜிங்குக்கு புறப்பட்ட அந்த விமானத்தின் Landing Gear கதவை, மடகாஸ்கர் நாட்டு மீனவரின் மனைவி துணி துவைக்கும் சலவைக்கல்லாக 5 ஆண்டுகளாக பயன்படுத்தி வந்துள்ளமை அண்மையில் தெரியவந்தது.

அதிலிருந்த உராய்வுகளை ஆராய்ந்த பிரிட்டன் பொறியியலாளர் Richard Godfrey, விமானி திட்டமிட்டே Landing Gear-ஐ பயன்படுத்தி விமானத்தை வேகமாக கடலில் தரையிறக்கியிருப்பதாக கருத்து தெரிவித்துள்ளார்.

Landing Gear-ஐ பயன்படுத்தி, விமானத்தை தண்ணீரில் தரையிறக்கினால், அது பல துண்டுகளாக நொறுங்கி, பயணிகள் வெளியேறுவதற்குள் வேகமாக மூழ்கிவிடும் என்பதால், ஆதாரங்களை அழிக்கும் நோக்கிலேயே விமானி அவ்வாறு செய்துள்ளதாகவும் Godfrey குற்றஞ்சாட்டியுள்ளார்.

உலக செய்திகள்

# தமிழக அமைச்சராக பதவியேற்றார் உதயநிதி

## "இனி படங்களில் நடிக்கமாட்டேன் 'மாமன்னனே' எனக்கு கடைசி படம்"



தமிழக அமைச்சராக சென்னை சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதி சட்டப்பேரவை உறுப்பினரும், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் மகனுமான உதயநிதி ஸ்டாலின், நேற்று பொறுப்பேற்றுகொண்டுள்ளார்.

அமைச்சராக பொறுப்பேற்றுகொண்டுள்ள உதயநிதி ஸ்டாலினுக்கு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவருக்கு, பதவிப்பிரமாணமும் இரகசிய காப்பு பிரமாணமும் ஆளுநர் ஆர்.என்.ரவி செய்து வைத்தார்.

உதயநிதி அமைச்சரானதைத் தொடர்ந்து தமிழக அமைச்சர்கள் எண்ணிக்கை 35 ஆக அதிகரித்துள்ளது.

**அமைச்சர் உதயநிதியின் முதல் ட்வீட்:**

பதவியேற்ற பின்னர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள முதல் ட்விட்டில்,

"எப்போதும் வழிநடத்தும் மாண்புமிகு முதலமைச்சர் ஸ்டாலினிடம், சமூகநீதி திட்டங்களை செயற்படுத்தி தமிழர் நலன் காக்கும் திராவிட மாடல் அரசின் அமைச்சரவையில் பங்கேற்க வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்து வாழ்த்து பெற்றேன். பதவியாக கருதாமல் பொறுப்பாக உணர்ந்து என்றும் பணியாற்றிடுவேன்" என்று பதிவிட்டிருந்தார்.

**இனி படத்தில் நடிக்கமாட்டேன்**

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த உதயநிதி ஸ்டாலின் பேசுகையில்,

"வாழ்த்து தெரிவித்த அனைவருக்கும் நன்றி. வாரிசு அரசியல் என விமர்சிப்பது எனக்கு புதிதல்ல. எனது செயல்களின் மூலம் விமர்சனங்களுக்கு பதிலளிப்பேன். விளையாட்டின் தலைநகரமாக தமிழகத்தை மாற்றுவேன். அனைத்து தொகுதிகளிலும் ஒரு மைதானம் என்ற வாக்குறுதியை நிறைவேற்றும் பணியை முதலில் செய்வேன்.

இனிமேல் திரைப்படங்களில் நடிக்கப் போவதில்லை. நடிகர் கமல்ஹாசன் தயாரிப்பில் நடிக்கவிருந்த படத்திலிருந்து விலகுகிறேன். இயக்குநர் மாரி செல்வராஜின் 'மாமன்னன்' படமே கடைசி படம்"

- என்றார்.

# கடும் பனிப்பொழிவு: முடங்கிய அமெரிக்கா



உலக புகழ்பெற்ற தஞ்சை பெரியகோவில் முற்றிலும் மறைந்த பனிமூட்டம்.....

கடும் பனிப்புயல் காரணமாக அமெரிக்கா முழுவதும் 137 விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

அமெரிக்காவில் கடந்த சில நாட்களாக கடும் பனிப்பொழிவு நிலவி வருகிறது. கடும் பனிப்புயல் காரணமாக நாடுமுழுவதும் 137 விமானங்கள் இரத்துசெய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நியூயோர்க் உள்ளிட்ட பல்வேறுமாகாணங்களில் வரலாறு காணாத அளவிற்கு பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளதால், மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் முடங்கியுள்ளது.

## இந்தியாவிலும் பாதிப்பு

இந்த பனிப்புயலால் நியூயோர்க், பென்சில்வேனியா, நெவாடா, கொலராடோ மற்றும் நெப்ராஸ்கா ஆகிய மாகாணங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. வீதிகளில் பல அடி உயரத்துக்கு பனித்துகள்கள் குவிந்துள்ளன. குளிர் வாட்டி வருவதால் மக்கள் வீடுகளுக்குள்ளேயே முடங்கியுள்ளனர்.

இதேவேளை, இந்தியாவின் பல பகுதிகளில் கடும் பனிபொழிவு நிலவி வருகின்ற நிலையில் நேற்று தஞ்சை பெரியகோவில் கோபுரம் தெரியாத அளவிற்கு பனிமூட்டம் காணப்பட்டது.

**சபரிமலை பக்தர்கள் கடும் பாதிப்பு**

மேலும், சபரிமலைக்கு செல்லும் பக்தர்கள் சாமி தரிசனத்திற்கு காலையிலேயே சென்ற நிலையில் பனிபொழிவு காரணமாக கோபுர தரிசனம் செய்ய முடியாமல் பல மணிநேரம் காத்திருந்து தரிசனம் செய்து சென்றனர். மேலும் பனிப்பொழிவு காரணமாக பொதுமக்கள் வீட்டிலேயே முடங்கியுள்ளனர்.

# அமெ.வில் தஞ்சமடைய மெக்சிக்கோ எல்லையில் காத்திருக்கும் அகதிகள்

அமெரிக்காவில் அகதிகளாக தஞ்சமடைய மெக்சிக்கோ எல்லையில் ஆயிரக்கணக்கானோர் முகாமிட்டுள்ளனர்.

இரு நாட்டு எல்லை அருகே அமைந்துள்ள ரியோ கிராண்ட் ஆற்றை இரவோடு இரவாக கடந்துவந்த 1,500 பேர் அமெரிக்காவின் டெக்சாஸ் மாநில எல்லையில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பு வேலி அருகே காத்திருக்கின்றனர்.

கொரோனா அச்சுறுத்தலால் எல்லையில் பிடிபடும் அகதிகளை நாடு கடத்த அமெரிக்க அரசு பிறப்பித்துள்ள



ஆணை, எதிர்வரும் 21ஆம் திகதியுடன் காலாவதியாவதால், அகதிகளின் வருகை மேலும் அதிகரிக்குமென தெரிகிறது.

# மட்டு. தொப்பிகலையில் கஞ்சா தோட்டம் முற்றுகை

## ஒருவர் கைது; கஞ்சா செடிகள் மீட்பு!



(கனகராசா சரவணன்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள தொப்பிகல, பூலக்காட்டு பிரதேசத்தில் கஞ்சா தோட்டமொன்றை நேற்று முன்தினம் (13) முற்றுகையிட்ட பொலிஸார், கஞ்சா செடிகளுடன் ஒருவரை கைதுசெய்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவ புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய வாழைச்சேனை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பொலிஸாருடன் இராணுவ புலனாய்வுப் பிரிவினர் இணைந்து நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் பூலக்காட்டிலுள்ள பண்ணையொன்றை முற்றுகை யிட்டனர்.

இதன்போது அங்கு கஞ்சா செடி பயிரிட்டு வளர்த்துவந்த 60 வயதுடைய ஒருவரை கைதுசெய்ததுடன், சுமார் 4 அடி கொண்ட 21 கஞ்சா செடிகளை மீட்டனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவரை நேற்று (14) வாழைச்சேனை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கிழக்கு மாகாண மின்சார பாவனையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடமாடும் சேவை

(ஆலையடிவேம்பு நிருபர்)

இலங்கை மக்கள் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் ஏற்பாடுசெய்யப்படும் கிழக்கு மாகாண மின்சார பாவனையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடமாடும் சேவை இம்மாதம் 20ஆம் திகதி அம்பாறை பிரதேச செயலக காரியாலயத்திலும், 21ஆம் திகதி உகண பிரதேச செயலக காரியாலயத்திலும், 22ஆம் திகதி கல்முனை பிரதேச செயலகத்திலும் நடைபெறும்.

காலை 9 மணிமுதல் ஆரம்பாகி இடம் பெறவுள்ள நடமாடும் சேவையில் மின்சார கணக்கின் பெயர் மற்றும் முகவரியை மாற்றுதல், மீற்றர், மின்கம்பங்களை மாற்றுதல், புதிய மின் இணைப்புகளை வழங்குதல், மின் அளவீட்டு முறைமையை மாற்றுதல், மின் பட்டியல், மின் தடைகள் போன்ற பிரச்சினைகளைத் தீர்த்தல் மற்றும் மின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிகாட்டல்களை வழங்குதல் உள்ளிட்ட இன்னும் பல சேவைகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

அதனடிப்படையில் மேற்குறிப்பிட்ட பிரச்சினைகள் எதுவும் இருப்பின் கீழே தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி தெரியப்படுத்தவும்.

அன்றைய தினம் உங்களது பிரச்சினை களைத் தீர்ப்பதற்காக அது சம்பந்தமான ஆவணங்களை கொண்டுவருமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

உங்களுடைய பிரச்சினைகளை சமர்ப்பிப்பதற்கும், வருகையை உறுதிப்படுத்துவதற்கும் 0772088278, 0765868278 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு கிழக்கு மாகாண நுகர்வோர் ஆலோசனை குழு உறுப்பினர் அழைப்பு விடுக்கின்றார்.

# பஸ்ஸில் கண்டெடுத்த தங்கச்சங்கிலியை உரியவரிடம் ஒப்படைத்த பயணி

## கல்முனை பொலிஸார் பாராட்டு



(பாறுக் ஷிஹான்)

சக பயணியினால் காணாமலாக்கப்பட்ட தங்கச் சங்கிலியை மீட்டு பொலிஸார் முன்னிலையில் ஒப்படைத்த நபரை கல்முனை தலைமையகப் பொலிஸார் பாராட்டியுள்ளனர்.

இச்சம்பவம் அம்பாறை மாவட்டம், கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் இடம் பெற்றதுடன், காணாமல்போன தங்கச்சங்கிலி சக பயணியால் மீட்கப்பட்டு பொலிஸார் முன்னிலையில் நேற்று முன்தினம் (13) மாலை உரிய நபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது,

கல்முனை பஸ் நிலையத்திலிருந்து நேற்று முன்தினம் (13) காலை மட்டக்களப்பு மாவட்டத்தை நோக்கிச் சென்ற களுவாஞ்சிக்குடி டிப்போவுக்குச் சொந்தமான அரச பஸ் ஒன்றில் ஓலுவில் பகுதியைச் சேர்ந்த தாதிய மேற்பார்வை உத்தியோகத்தர் தனது மகளுடன் பயணம் செய்துள்ளார். இவ்வாறு பயணம் செய்த நிலையில், அதே பஸ்ஸில் பெரியகல்லாறு பகுதியிலிருந்து காத்தான்குடி பிரதேச செயலக சமுர்த்தி வங்கியில் கடமையாற்றும் மற்றுமொரு பயணியும் பயணித்துள்ள நிலையில், 2 பவுண் பெறுமதியான தங்கச்சங்கிலி அவரை அறியாமல் பஸ்ஸுக்குள் தவறி விழுந்துவிட்டது.

இவ்வாறு தவறவிட்ட தங்கச்சங்கிலியை சக பயணியாக பயணித்த தாதிய மேற்பார்வை உத்தியோகத்தர் கண்டெடுத்து பஸ் நடத்துனருக்கு தெரியப்படுத்தியதுடன், உரிய நபரிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

இந்நிலையில், தனது கழுத்தில் இருந்த தங்க மாலை காணாமல் சென்றதை அறிந்த காத்தான்குடி பிரதேச செயலக சமுர்த்தி வங்கியில் கடமையாற்றும் பயணி, உடனடியாக அலுவலகத்திலிருந்து தனது வீட்டுக்குச் சென்று தொலைந்த தங்கச்சங்கிலியை தேடியுள்ளார். பின்னர் தங்கச்சங்கிலி அங்கும் கிடைக்காமையினால் உடனடியாக தான் பயணம் செய்த பஸ் நினைவுக்கு வரவே பஸ்ஸில் வழங்கப்பட்ட ரிக்கட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொண்டு குறித்த பஸ் நடத்துநரிடம் நடந்த விடயத்தை தெளிவுபடுத்தியுள்ளார்.

இதன்போது நடத்துநரும் தங்கச்சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் அதை கண்டெடுத்தவர் உரியவரிடம் ஒப்படைக்க விரும்புவதாகவும் அவரை தொடர்பு கொண்டு உரிய ஆதாரங்களை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளுமாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதற்கமைய காணாமல்போன தங்கச் சங்கிலியை கண்டெடுத்த தாதிய மேற்பார்வை உத்தியோகத்தரை தொடர்பு கொண்டு ஆதாரங்களை பொலிஸார் முன்னிலையில் சமர்ப்பித்துள்ளார்.

இதன்போது காணாமல்போன தங்கச்சங்கிலி தொடர்பான ஆதாரங்கள் பரிசீலிக்கப்பட்ட பின்னர் சுமார் 3 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதிகொண்ட தங்கச்சங்கிலி பொலிஸார் முன்னிலையில் உரிமையாளரான பெண் பயணியிடம் ஒப்படைக்கப்பட்டது.

தங்கச்சங்கிலியை பொலிஸார் முன்னிலையில் உரிமையாளரிடம் ஒப்படைக்க முயற்சிசெய்த தாதிய மேற்பார்வை உத்தியோகத்தரை கல்முனை பொலிஸார் பாராட்டியுள்ளனர்.

## போழியார் புலம்பல்!



***முந்தநாள் மயண்டைக்க நரில் ராஜபக்‌ஷ கொஞ்சப் பேரோட அரசியல் தீர்வு காணுற கூட்டம் என்று ஒரு படம் காட்டினாரு எலுவா..?***

***அந்த கூட்டம் உப்பு சப்பு இல்லாமல் அலட்டல் கூத்தாம். அந்த குள்ள நரி ஒண்டுக்கும் சாதகமாக பதில் வழங்காமல் ஆர குழி வெட்டலாம் எண்ட மாதிரித்தான் பார்த்துக்கொண்டு இருந்ததாம் .. இதில சம்பந்தரு மட்டும் காணாமல்போனவங்கள நீங்கள் கொலை செய்திட்டியல் அத ஒள்ளுப்பம் சொல்லுங்கவன் எண்டு கேட்டாராம். எப்படி தீர்வு..!***

# கேரள கஞ்சாவுடன் கைதான நபருக்கு விளக்கமறியல்

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 680 கிராம் கேரள கஞ்சா போதைப்பொருளை வைத்திருந்த நபர் ஒருவரை இம்மாதம் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்ற நீதவான் நேற்று முன்தினம் (13) உத்தரவிட்டார்.

தகம் மாவத்தை, அக்போபுர பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய ஒருவரே விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கஞ்சா போதைப்பொருளுக்கு அடிமையான ஒருவரே. அவர் வீட்டில் 680 கிராம் கேரள கஞ்சாவை மறைத்து வைத்திருந்த நிலையில், பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய கைதுசெய்து பொலிஸார் கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# ஈரோஸ் அமைப்பின் நிறுவுனருக்கு 17ஆம் ஆண்டு நினைவேந்தல்



(கல்லடி நிருபர்)

ஈரோஸ் அமைப்பின் நிறுவுனர் தோழர் இரட்ணசபாபதியின் (இரட்ணா) 17ஆவது நினைவேந்தல் நிகழ்வு அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு வை.எம்.சீ.ஏ. ஒன்றுகூடல் மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை (12) மாலை இடம்பெற்றது.

ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் தலைவர் தோழர் இரா.ஜீவன் ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மறைந்த தோழர் இரட்ணசபாபதியின் தாயார் தெய்வானை அம்மாள் சுடர் ஏற்றிவைக்க, வரவேற்புரையை கிழக்கு மாகாண செயலாளர் தோழர் சுந்தர் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில், ஈரோஸ் ஜனநாயக முன்னணி பொதுச் செயலாளர் தோழர் இரா.ஜீவன், ஈரோஸ் ஜனநாயக முன்னணி ஆய்வாளர் பேராசிரியர் பால.சுகுமார், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் தோழர் புஸ்பராசா, ஈரோஸ் ஒருங்கிணைப்புச் செயலாளர் தோழர் திருச்செல்வம் மற்றும் அரசியல் சமூக ஆய்வாளரும், புரட்சிகர ஜனநாயக இயக்கத்தின் முன்னணிச் செயற்பாட்டாளருமான ஜபார் உட்பட முன்னணியின் முக்கிய உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.



இதன்போது கலந்துகொண்ட முக்கியஸ்தர்களால் தோழர் இரத்தினசபாபதி வடக்கு, கிழக்கு கடந்து மலையகத்திலும் வாழும் எம் தமிழ் உறவுகளுக்காகக் குரல் கொடுத்ததாகவும், இன்று எம்மிடையே புரையோடிப் போய்க் காணப்படும் இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பெறுவதற்கு நாம் அனைவரும் ஒன்றித்துச் செயற்படுவதே அன்னாருக்குச் செய்யும் நன்றிக் கடனாகும் - எனக் குறிப்பிட்டனர்

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# மகிழடித்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மருந்துப் பொருட்கள் வழங்கிவைப்பு!



(கல்லடி நிருபர்)

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய பரிபாலன சபையால் மகிழடித்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு சிறுவர்களுக்கான பனடோல் பாணி மருந்துத்தொகுதி நேற்று முன்தினம் (13) வழங்கப்பட்டது.

குறித்த மருந்தை கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய பரிபாலன சபையின் வண்ணக்கர்கள் வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி வைத்தியர் பி.தக்சனிடம் கையளித்தனர்.

இதன்போது மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் அங்கத்தவர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

குறித்த ஆலய பரிபாலன சபையினர், சமூக சேவைகளை முன்னெடுத்து வருகின்றனர், அதன் ஓர் அங்கமாக மருத்துவ சேவைக்காக இவ்வுதவி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இறக்காமம் பிரதேச சபையின் வரவு-செலவுத்திட்டம் தோல்வி

இறக்காமம் பிரதேச சபையின் அமர்வு நேற்று முன்தினம் (13) தவிசாளர் ஜெமில் காரியப்பர் தலைமையில் இடம்பெற்றபோது, 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. இதன்போது, வரவு-செலவுத்திட்டத்திற்கு ஆதரவாக 6 உறுப்பினர்களும், எதிராக 7 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

வரவு-செலவுத்திட்டத்திற்கு ஆதரவாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உப தவிசாளர் நௌபர் மௌலவி, அன்வர், பாஹிமா, பொதுஜன பெரமுன கட்சியின் சிறியலதா மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தவிசாளர் ஜெமில் காரியப்பர், நிர்மலா ஆகியோர் வாக்களித்தனர்.

வரவு-செலவுத்திட்டத்திற்கு எதிராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னாள் தவிசாளர் கலிலுர் றஹ்மான், றபாய்டீன், சுலைஹா, சுல்பிகார் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஆஸிக், நைஸர், முஸ்மி ஆகியோர் எதிர்த்து வாக்களித்தனர்.

இதன்மூலம் இறக்காமம் பிரதேச சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் ஒரு மேலதிக வாக்கால் தோல்வியடைந்தது.

முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிகளின் கூட்டிலுள்ள இறக்காமம் பிரதேச சபையில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் 3 உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தமையே வரவு-செலவுத்திட்டம் தோல்வியடைந்தமைக்கு முக்கிய காரணமாகும்.

இறக்காமம் பிரதேச சபையில் மொத்தமாக 13 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# நாட்டில் 40,000 குழந்தைகளின் போசாக்குத் தேவையை பெற்றோர்களால் பூர்த்திசெய்ய முடியாத நிலைமை





கொவிட்-19 பெருந்தொற்றின் பின்னர் நிலையற்ற கடன், மோசமான பண இருப்பு மற்றும் பொருளாதார நெருக்கடி போன்றவற்றிலிருந்து எமது நாடு இன்னும் மீளவில்லை. இதன் காரணமாக எமது நாட்டில் போசாக்கு குறைபாடுள்ள சுமார் 40,000 குழந்தைகளின் போசாக்குத் தேவையை பெற்றோர்களால் பூர்த்திசெய்ய முடியாத நிலைமை காணப்படுவதாக இலங்கை காப்போம் தொண்டு நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் கு.பிரதீப்கரன் தெரிவித்தார்.

இலங்கை காப்போம் தொண்டு நிறுவனத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட திருகோணமலை இலுப்பங்குளம் கிராமத்திலுள்ள 100 சிறுவர்களுக்கு போசாக்குணவு வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை மாலை (12) இலுப்பங்குள கிராமசேவகர் அலுவலகத்தில், அதன் ஒருங்கிணைப்பாளர் வி.ஆர்.விஜித்ரா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

போசாக்கு குறைபாடுள்ள சிறுவர்கள் இதுவரை 21,000 பேர் இனங்காணப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் அந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என சுகாதார அமைச்சர் அண்மையில் தெரிவித்துள்ளார். இந்நிலைமையை இல்லாதொழிக்கவும், எமது நாட்டில் ஒரு நிலையான ஸ்திரத்தன்மையைக் கட்டியெழுப்புவதற்கும் பல தொண்டு நிறுவனங்கள் முன்னின்று செயற்பட்டு வருகின்றன.

போசாக்குள்ள சிறார்களை எமது நாட்டில் உருவாக்கவேண்டும் என்ற நன்நோக்கில் வெளிநாட்டில் இருக்கின்ற எமது நாட்டவர்கள் எங்களைப் போன்ற தொண்டு நிறுவனங்கள் ஊடாக பாடசாலை மாணவர்களுக்கும், சிறுவர்களுக்கும் போசாக்கான உணவு வகைகளை வழங்கி வருகின்ற அதேவேளை, கற்றல் உபகரணங்களையும், உலருணவுப் பொதிகளையும், பயன்தரும் மரக்கன்றுகளையும் வழங்க பல உதவிகளைச் செய்து வருகின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியின் வறுமை, நலன்புரி பாதிப்புகள், பாடசாலைக் கல்வியைத் தொடர முடியாத மாணவர்களின் வறிய நிலை மற்றும் சிறுவர்களைப் பாதிக்கப்படக்கூடிய போசாக்குத் திட்டம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற செயற்பாடுகளை பாதுகாப்பதிலும், சமூகப் பாதுகாப்பின் பங்கை எடுத்து நோக்குவதிலும் இலங்கை காப்போம் தொண்டு நிறுவனம் பல ஆண்டுகாலமாக பாரிய அர்ப்பணிப்புடனான சேவைகளைச் செய்து வருகின்றது - என்றார்.

இந்நிகழ்வில், இலுப்பங்குளம் பிரதேச முக்கியஸ்தர்கள், கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், காப்போம் நிறுவனத்தின் உதவிப் பணிப்பாளர், செயலாளர், பொருளாளர் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் உள்ளிட்ட அக்கிராம மக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# FIFA WORLD CUP - 2022



# இறுதிப்போட்டியுடன் விடைகொடுக்கிறார் மெஸ்ஸி

ஆர்ஜென்ரீனா உதைபந்து ஜாம்பவான் லியோனல் மெஸ்ஸி, நடப்பு உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் விளையாடிய பின்னர் சர்வதேச உதைபந்து போட்டிகளிலிருந்து ஓய்வு பெறப்போவதை உறுதிப்படுத்தியுள்ளார். இதையடுத்து 18ஆம் திகதி நடக்கவுள்ள இறுதிப்போட்டியில் ஆர்ஜென்ரீனா விளையாடவுள்ள நிலையில், அதன்பின்னர் மெஸ்ஸி ஓய்வுபெறவுள்ளார் என தெரியவந்துள்ளது.

உலகக்கிண்ணப் பயணத்தை இறுதிப் போட்டியில் விளையாடியவுடன் முடிவுக்கு கொண்டுவருவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன், அடுத்த தொடர் வருவதற்கு பல வருடங்களாகும், என்னால் அதை செய்ய முடியாது என்று நினைக்கிறேன். இப்படி முடித்துக்கொள்வதே சிறந்தது என அவர் கூறினார். 35 வயதான மெஸ்ஸி தனது ஐந்தாவது உலகக்கிண்ணத்தில் விளையாடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# குரோஷியாவை வீழ்த்தி 8 ஆண்டுகளின் பின் மீண்டும் இறுதிப்போட்டியில் ஆர்ஜென்ரீனா

## மெஸ்ஸியின் சம்பியன் கனவு நனவாகுமா?

(ஏ. அகீல் சிஹாப்)

22ஆவது பீபா உலகக்கிண்ண உதைபந்து தொடரின் முதல் அரையிறுதி ஆட்டத்தில், 2018 பீபா உலகக்கிண்ணத்தில் ரன்னர்ஸ்-அப் (இரண்டாமிடம்) குரோஷியாவை இலகுவாக வீழ்த்திய லியோனல் மெஸ்ஸி தலைமையிலான ஆர்ஜென்ரீனா அணி முதல் அணியாக இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.

நேற்று நள்ளிரவு 12.30 மணிக்கு கட்டாரின் டோஹா நகரிலுள்ள லூசைல் மைதானத்தில் நடந்த இந்த ஆட்டத்தில் பலமிக்க இரு அணிகளும் ஆக்ரோஷமாக ஆட்டத்தை ஆரம்பித்தன. என்றாலும், ஆட்டத்தின் 34ஆவது நிமிடத்தில் பெனால்டி வாய்ப்பு கிடைக்க, அதை கச்சிதமாக பயன்படுத்திக்கொண்ட ஆர்ஜென்ரீனா அணியின் தலைவரும், நட்சத்திர வீரருமான லியோனல் மெஸ்ஸி முதல் கோல் அடித்தார்.

இந்த கோல் மூலம் பீபா உலகக்கிண்ண வரலாற்றில் ஆர்ஜென்ரீனா அணிக்காக அதிக கோல் அடித்த வீரர் என்ற சாதனையை படைத்தார் மெஸ்ஸி. ஆர்ஜென்ரீனாவின் கோல் எண்ணிக்கையை மெஸ்ஸி தொடங்கிவைக்க அவருக்கு பக்கபலமாக இருந்து அணியை முன்னிலை பெறவைத்தது ஜூலியன் அல்வாரெஸ். குறித்த ஆட்டத்தின் ஹீரோ இவர் என்றே சொல்லலாம். ஏனென்றால், மெஸ்ஸி கோல் அடித்த அடுத்த ஐந்தாவது நிமிடத்தில், அதாவது, ஆட்டத்தின் 39ஆவது நிமிடத்தில் சிறப்பான கோல் ஒன்றை அடித்து முதல் பாதியில் குரோஷியாவை விட 2 - 0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெறவைத்தார்.

இரண்டாம் பாதி ஆட்டத்தின் 69ஆவது நிமிடத்திலும் ஜூலியன் அல்வாரெஸ் கோல் அடித்து கெத்து காட்டினார். இதனால் ஆர்ஜென்ரீனா 3 - 0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. மெஸ்ஸி மற்றும் அல்வாரெஸ் ஏற்படுத்திய பாதிப்பிலிருந்து மீள குரோஷியா பல முறை முயன்றும் முடியவில்லை. ஆட்டத்தின் இறுதியில் 3 - 0 என்ற கோல் கணக்கில் குரோஷியாவை வீழ்த்தி ஆர்ஜென்ரீனா முதல் அணியாக நடப்பு பீபா உலகக்கிண்ணத் தொடரில் 8 வருடங்களின் பின் இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

நடப்பு பீபா உலகக்கிண்ணத் தொடரில் தங்களது முதல் லீக் ஆட்டத்தில் சவூதி அரேபியாவிடம் அதிர்ச்சி தோல்வியடைந்த ஆர்ஜென்ரீனா அணி தற்போது இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றுள்ளமையும் ரசிகர்களிடத்தில் ஒரு வித்தியாசமான உணர்வை ஏற்படுத்தியுள்ளது. 1978ஆம் ஆண்டு சம்பியன் பட்டம் வென்ற ஆர்ஜென்ரீனா, 1986இல் டீகோ மரடோனா தலைமையில் சம்பியன் பட்டம் வென்றது. அதன்பின் 36 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் சம்பியன் மகுடம் சுடும் முனைப்புடன் விளையாடிய ஆர்ஜென்ரீனா இப்போது இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளது.





உதைபந்து உலகின் நட்சத்திர வீரரான ஆர்ஜென்ரீனாவின் லியோனல் மெஸ்ஸி 2ஆவது முறையாக உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் விளையாடவுள்ளார். 2014ஆம் ஆண்டு ஜேர்மனியிடம் தோல்வியடைந்த இறுதி ஆட்டத்திலும் மெஸ்ஸி பங்கேற்றிருந்தார். கழக மட்டத்தில் பல்வேறு பட்டங்களை வென்றுள்ள மெஸ்ஸி, தேசிய அணிக்காக கோபா அமெரிக்கா பட்டம் மட்டுமே வென்றுள்ளார். அவரது கிண்ண சேகரிப்பில் பீபா உலக சம்பியன் பட்டம் மட்டுமே வறட்சியாக உள்ளது. எனவே, அவர் அந்தக் கனவை நனவாக்கும் முயற்சியில் இறுதிப்போட்டி வரை ஜெயித்துவிட்டார். சம்பியன் பட்டம் வெல்வாரா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.



# ஐ.பி.எல். ஏலத்தில் 10 இலங்கை வீரர்கள்

2ஆம் ஆண்டு ஐ.பி.எல். தொடருக்கான மினி ஏலம் எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், அதற்கான இறுதிப் பட்டியலில் இலங்கையில் 10 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

குறித்த ஏலத்தில் மொத்தமாக 991 வீரர்கள் தங்களுடைய பெயர்களை பதிவுசெய்திருந்த நிலையில், 405 வீரர்கள் மாத்திரமே ஏலத்தில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளனர். இதில் 273 இந்திய வீரர்கள், 132 வெளிநாட்டு வீரர்கள் மற்றும் ஐசிசியின் முழு அங்கத்துவத்தைப் பெறாத நாடுகளிலிருந்து 4 வீரர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இலங்கை அணியைச் சேர்ந்த 23 வீரர்கள் தங்களுடைய பெயர்களை பதிவுசெய்திருந்ததில் 10 வீரர்கள் மாத்திரமே ஏலத்துக்கான பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். இதில் 2 கோடியை நிர்ணயித்திருந்த அஞ்சலோ மெத்யூஸ் மற்றும் ஒரு கோடியை நிர்ணயித்திருந்த குசல் பெரேரா ஆகியோர் இறுதி ஏலப்பட்டியலில் இடம்பெறவில்லை.

இலங்கை அணித்தலைவர் தசுன் ஷானக்க, குசல் மெண்டிஸ், பெதும் நிசங்க, துஷ்மந்த சமீர, தனஞ்ஜய டி சில்வா, துனித் வெல்லாலகே, டில்ஷான் மதுசங்க, லஹிரு குமார, சாமிக்க கருணாரத்ன மற்றும் சரித் அசலங்க ஆகிய 10 வீரர்கள் இம்முறை ஏலத்தில் இடம்பெறவுள்ளனர். குறித்த வீரர்கள் அனைவரும் 50 இலட்சம் அடிப்படைத் தொகையில் இடம்பெற்றுள்ளனர்.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# போர்த்துக்கல் பயிற்சியாளர் மீது ரொனால்டோவின் ரசிகர்கள் கடும் விமர்சனம்





(ரமணி)

உலகக்கிண்ண உதைபந்தாட்டத்தின் முக்கியமான போட்டிகளில் ரொனால்டோ தாமதமாகக் களமிறக்கப்பட்டதால் அவரின் ரசிகர்கள் கடும் கோபமடைந்துள்ளனர். இணையதளங்களிலும், பேஸ்புக் டுவிட்டர் போன்ற சமூக ஊடகங்களிலும் போர்த்துக்கல் பயிற்சியாளர் பெர்னாண்டோ சான்டோஸ் மீது ரொனால்டோவின் ரசிகர்கள் கடும் கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றனர்.

மொராக்கோவுக்கு எதிரான காலிறுதிப் போட்டியில் ரொனால்டோ தாமதமாக களத்தில் இறக்கப்பட்டதற்கு அணியின் பயிற்சியாளர் பெர்னான்டோ சான்டோஸ்தான் காரணம். இந்நிலையில், ரொனால்டோவின் தோழி ஜோர்ஜினா பயிற்சியாளர் பெர்னாண்டோவை விமர்சித்து இன்ஸ்டாகிராமில் பதிவிட்டுள்ளார்.

அவர் தனது பதிவில் கூறியிருப்பதாவது, போட்டியில் இறங்கியபோது எல்லாமே மாறி இருப்பதையும், தான் மிக தாமதமாக களத்தில் இறங்கி இருப்பதையும் ரொனால்டோ உணர்ந்துகொண்டார். உலகின் சிறந்த விளையாட்டு வீரரின் திறமையை பயிற்சியாளர் குறைத்து மதிப்பிடக்கூடாது. இதுபோன்ற மோசமான நிலைமை ரொனால்டோவுக்கு ஏற்படக்கூடாது. இன்று போர்த்துக்கல் அணி தோல்வியடையவில்லை. மாறாக, பாடங்களை கற்றுக்கொண்டுள்ளது. ரொனால்டோவுக்கு எனது பாராட்டுகள் - என்று கூறியுள்ளார்.

இதற்கிடையே ரொனால்டோ தாமதமாக போட்டியில் பங்கேற்க வைக்கப்பட்டது குறித்து பயிற்சியாளர் பெர்னாண்டோவிடம் கேட்டபோது, அது பற்றி தான் வருத்தம் கொள்ளப்போவதில்லை என்று கூறியிருந்தார்.

தோல்வியால் மனமுடைந்து கண்ணீர் விட்டு ரொனால்டோ அழுத காட்சிகள் சமூக ஊடகங்களில் வைரலாகியுள்ளன. இந்தப் போட்டியில் ரொனால்டோ 51ஆவது நிமிடத்தில்தான் களத்தில் இறங்க அனுமதிக்கப்பட்டார்.

ரொனால்டோ இடம் பெறாத போர்த்துக்கல் அணிதான் சுவிட்சர்லாந்து அணிக்கு எதிராக 6 கோல்களை அடித்ததை அவர் குறிப்பிட்டுள்ளார். 37 வயதாகும் ரொனால்டோ இந்த உலகக்கிண்ணப் போட்டியுடன் சர்வதேச போட்டியிலிருந்து விடை பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# நீளம் பாய்தலில் இரண்டாமிடத்தைப் பெற்ற நிப்றான்

(றியாஸ் இஸ்மாயில்)

பாலமுனை ஹிக்மா வித்தியாலய மாணவன் எம்.எச்.எம்.நிப்றான் தடகள விளையாட்டுப் போட்டியில் 16 வயது ஆண்கள் பிரிவில் நீளம் பாய்தலில் 6.33 மீற்றர் தூரம் பாய்ந்து தேசிய ரீதியில் இரண்டாமிடத்தைப் பெற்றுக்கொண்டார்.

அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்சேய்க் ஏ.எம். றஹ்மத்துல்லாஹ் நேற்று குறித்த பாடசாலைக்கு திடீர் விஜயம் செய்து குறித்த மாணவன் எம்.எச்.எம்.நிப்றானை பாராட்டி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தடகள விளையாட்டுப்போட்டி அண்மையில் கல்வி அமைச்சினால் கொழும்பு சுகததாஸ விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதி கல்விப் பணிப்பாளர் ஏ.ஜீ.பஸ்மில், பாடசாலை அதிபர் ஏ.எல்.எம். பாயிஸ், பிரதி அதிபர் ஐ.எல்.எம். பாஹிம், உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.ஜெமீல், ஆசிரிய ஆலோசகர் எம்.எச்.எம். ஹம்மாத், மாணவரை பயிற்றுவித்த ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.



# முதல் முறையாக அரையிறுதிக்குள் நுழைந்த தமிழ் தலைவாஸ்

ஆவது ப்ரோ கபடி லீக் தொடர் விறுவிறுப்பாக இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், தமிழ் தலைவாஸ் அணி முதல் முறையாக அரையிறுதிக்குத் தகுதிபெற்றுள்ளது. பரபரப்பாக நடைபெற்ற போட்டியில் தமிழ் தலைவாஸ் அணி வெற்றிபெற்று அரையிறுதிக்குள் நுழைந்தது.

12 அணிகள் பங்கேற்ற தொடரில் ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா 2 முறை மோதின. லீக் முடிவில் முதல் இரு இடங்களைப் பிடித்த ஜெய்ப்பூர் பிங்க் பாந்தர்ஸ் (82 புள்ளி), புனேரி பால்டன் (80 புள்ளி) ஆகிய அணிகள் பிளே-ஆப் சுற்றுக்குத் தகுதி பெற்று நேரடியாக அரையிறுதியில் விளையாடுகின்றன.

இதேபோல் 3ஆவது இடத்தை பெங்களூர் பூல்சும் (74 புள்ளி), 4ஆவது இடத்தை உ.பி. யோத்தாசும் (71 புள்ளி), 5ஆவது இடத்தை தமிழ் தலைவாஸும் (66 புள்ளி), 6ஆவது இடத்தை நடப்பு சாம்பியன் தபாங் டெல்லியும் (63 புள்ளி) பிடித்து பிளே-ஆப் சுற்றுக்கு வந்தன. பிளே-ஆப் சுற்று மும்பையில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. இதில் முதல் ஆட்டத்தில் பெங்களூர் பூல்ஸ் - தபாங் டில்லி அணிகள் மோதின.

தொடக்கம் முதல் தனது ஆதிக்கத்தை செலுத்திவந்த பெங்களூர் அணி, டில்லியை எளிதில் வீழ்த்தியது. அந்த அணி 56-24 என்ற புள்ளிகள் கணக்கில் தபாங் டில்லியை வீழ்த்தியது. இதையடுத்து இரண்டாவதாக நடைபெற்ற போட்டியில் தமிழ் தலைவாஸ்- உ.பி. யோத்தாஸ் அணிகள் மோதின. பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டம் 36-36 என்ற கணக்கில் சமனில் முடிவடைந்தது. இதையடுத்து டை பிரேக்கர் கடைப்பிடிக்கப்பட்டது. இதில் தமிழ் தலைவாஸ் அணி 2-3 என்ற கணக்கில் யூபி யோத்தாவை வீழ்த்தி முதல் முறையாக அரையிறுதி சுற்றுக்குள் நுழைந்தது.




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7